பக்கங்கள்:13 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 24 சனிக்கிழமை 08.01.2022 கதிர் 64

### இனி இது ரகசியம் அல்ல!

ஆளுநர் ஆரவாரம் – அலப்பறை – பற்றி நேற்றுக் குறிப்பிட்டேன். இப்போது யாழ்ப்பாணத்தின் மூத்த சிவில் அதிகாரிகள் மட்டத்தில் அந்தத் 'தலையிடி' பற்றித்தான் ஒரே பேச்சு. விடயம் சந்தி சிரிக்கும் விவகாரமாக மாறியிருக்கின்றது. பக்கம்02

## கிணற்றிலிருந்து குடும்பஸ்தர் சடலமாக மீட்பு!

(வவுனியா நிருபர்)

வவுனியா-நெளுக்குளம், சாம்பல்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள கிணறு ஒன்றிலிருந்து குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியா - சாம்பல்தோட்டம் பகுதியில் வசித்து வரும் இரண்டு பிள்ளைகளின் 10

## இராணுவ ஆட்சிக்கு ஒருபோதும் இடமளியோம்; கோட்டா அரசை வீட்டுக்கு அனுப்பியே தீருவோம்

### வவுனியாவில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சூளுரை



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு நாட்டை இராணுவ ஆட்சிக்குக் கொண்டு செல்வது தொடர்பான எண்ணம் இருக்கும் என நான் எண்ணவில்லை. அதற்கு எதிரணியினராகிய நாம் ஒருபோதும் இடமளிக்கவும் மாட்டோம். இந்த அரசை வீட்டுக்கு அனுப்பி புதிய ஆட்சியை நிறுவுவதே எமது நோக்கம். இதை நிறைவேற்றியே தீருவோம்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வவுனியா ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், 2

# எவர் என்ன ஆட்டம் போட்டாலும் அரசைக் கவிழ்க்கவே முடியாது!

## ஜனாதிபதி கோட்டாபய திட்டவட்டம்



மக்களின் அமோக ஆதரவுடன் நிறுவப்பட்ட எமது அரசு நிலையான அரசு. உள்ளுக்குள் இருந்தும் வெளியில் இருந்தும் எவர் என்ன தான் ஆட்டம் போட்டாலும் எமது அரசை ஒருபோதும் வீழ்த்தவும் முடியாது; கவிழ்க்கவும் முடியாது.

– இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார். 10

## கோட்டா அரசு படுதோல்வி; புதிய தலைவர் வேண்டும்!



### ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை

தோல்வியடைந்த கோட்டாபய அரசால் இனி ஒன்றுமே செய்ய முடியாது. எனவே, புதிய தலைவரைத் தெரிவு செய்யுங்கள்.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- 2

### மோடியைச் சந்திப்பதற்கான

## பஸிலின் டில்லி பயணம் தாமதமாகும் சாத்தியம்!



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திப்பதற்கான நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் புதுடில்லி விஜயம் பிற்போட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

நிதி அமைச்சர் எதிர்வரும் திங்கள் அல்லது 10

## தூக்கில் தொங்கிய நிலையில் இளம் யுவதியின் சடலம் மீட்பு!

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் இளம் யுவதி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா - மணிபுரம் பகுதியில் வசிக்கும் இளம் யுவதி ஒருவர், தாய், தந்தை வேலை நிமித்தம் நேற்றுக் காலை வவுனியா நகருக்குச் சென்ற நிலையில் தனிமையில் இருந்துள்ளார்.

சிறிது நேரம் கழித்து பெற்றோர் வீட்டுக்கு வந்தபோது குறித்த இளம் யுவதி வீட்டு அறையில் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார்.

உடனடியாகக் குறித்த 10

## 'எளிமைமிகு பரிபாலக ஆளுமை' கைநூல் வெளியீடு

(இ.கலையமுதன்)



வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் எழுதிய 'எளிமைமிகு பரிபாலக ஆளுமை' என்ற கைநூல் வெளியீடு நேற்றுப் பிற்பகல் 4 மணிக்கு யாழ். நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெற்றது.

நல்லூர் கந்தசுவாமி கோயில் பரிபாலகர் அமரர் இரகுநாத குமாரதாஸ் 10

## பேச்சு சுதந்திரம் தேசத் துரோக செயலுக்கான திறந்த உரிமம் என்று நினைக்கவே வேண்டாம்

### சிவாஜிக்கு ஜீவன் இப்படிப் பதிலடி

(ந.லோகதயாளன்)



பேச்சு சுதந்திரம், இருக்க இருக்கும் சுதந்திரம் என்பன கிடைக்கின்றது என்பதற்காகத் தேசத் துரோக செயல்களுக்கான திறந்த உரிமம் இருக்கின்றது எனத் தவறாக நினைக்க வேண்டாம்.

- இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் வடக்கு மாகாண சபையின் 10

## யாழில் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 4 சந்தேகநபர்கள் கைது!

சுன்னாகம் பொலிஸ் பிரதேசம் மற்றும் கொடிகாமம் பொலிஸ் பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதிகளில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் 4 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் இயங்கும் விசேட புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட நான்கு சந்தேகநபர்களும் உடுவில் பகுதியைச் சேர்ந்த 22 முதல் 26 வரையான வயதுகளையுடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் 10

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"வடக்கு மாகாண ஆளுநர் தனது பொறுப்பின் எல்லையோ அல்லது அப் பதவியின் சட்ட வரையறையோ தெரியாது செயற்படுகின்றார்." – என வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா கூறிய கூற்றை மெய்ப்பிக்கும் வகையிலேயே விடயங்கள் தொடர்ந்து அரங்கேறி வருகின்றன.

சில அமைச்சுகளின் செயலாளர்கள் கோவைகளினால் முகத்தில் எறி வாங்கும் அளவுக்கு நிகழ்வுகள் இடம்பெறத் தொடங்கியிருக்கின்றன.

தம் பக்கம் நியாயம் இருப்பதால் எதிர்த்துக் கதைக்கும் மூத்த அதிகாரிகளுக்கு இடமாற்றக் கடிதத்துக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்றது.

வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளராக சுந்தரம் டிவகலாலா இருந்த போது நடந்த ஒரு சம்பவம் எனக்கு நினைவுக்கு வருகின்றது. ஆளுநராக இருந்த காமினி பொன்சேகா – பிரபல சிங்கள நடிகர் – முறையற்ற உத்தரவு ஒன்றை கல்விச் செயலாளருக்கு வழங்கினார். அதை முன்னெடுக்க முடியாது என்று முகத்தில் அடித்தால் போல பதில் சொன்னார் கல்விச் செயலாளர். வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகமே அல்லோல கல்லோலப்பட்டது. கல்விச் செயலாளர் பதவியில் இருந்து சுந்தரம் டிவகலாலா மாற்றப்படுகின்றார் என்று முதலில் செய்தி வந்தது. ஆனால் அடுத்த நாள் நடந்ததோ வேறு. வடக்கு – கிழக்கு மாகாண ஆளுநர் பதவியிலிருந்து காமினி பொன்சேகாவே தூக்கப்பட்டார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியாயமாக நடந்தமையால் அப்படி எல்லாம் நீதி நிலை நாட்டப்பட்டது. இப்போது அப்படி எங்கே சாத்தியம்?

நீதி, நியாயம், பொறுப்புக் கூறல் போன்றவற்றை மறந்தவர்கள் ஆட்சியில் – சிவாஜிலிங்கத்தின் பாணியில் கூறுவதானால் அவரின் 'எடுபிடி'களின் நிர்வாகத்தில் – இப்படித்தான் நடக்கும். அதில் ஆச்சரியம் இல்லை.

வடக்கு – கிழக்கு மாகாண சபை 1988 இல் கூட்டப்பட்டது. 1990 முற்பகுதியில் அதன் முதலமைச்சர் வரதராஜப்பெருமாளும் ஏனையோரும் ஒரிஸ்ஸாவுக்குக் கப்பல் ஏற சபை செயலிழந்தது.

ஆனாலும் வடக்கு – கிழக்கு மாகாண சபை இரண்டாகப் பிரிக்கப்படும் வரை – 2006 வரை – அந்தச் சபை இருந்தது. ஆனால் தேர்தல்கள் நடத்தப்படவில்லை.

தேர்தல் மூலமாக புதிய சபை தேர்ந்தெடுக்கப்படும் வரை, அதுவரையான சபையின் அவைத் தலைவர் தொடர்ந்து பதவியில் இருப்பார் என்பது சட்டம். உண்மையில் சபையின் அவைக் கட்டடமே அவைத் தலைவரின் பொறுப்பில்தான் இருக்கும். தேர்தல் நடைபெற்று புது அவைத் தலைவர் தெரிவாகும் வரை பழைய அவைத் தலைவர் பதவியில் தொடருவார். அவருக்கு சம்பளம், வாகனம், அலவன்ஸ், ஏனைய சிறப்புரிமைகள் எல்லாம் உண்டு.

வடக்கு – கிழக்கு மாகாண சபை 1990 செயல் இழந்தாலும் 2006 இல் அது இரண்டு மாகாண சபைகளாகப் பிரிக்கப்படும் வரை செயலிழந்த வடக்கு – கிழக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் பொன்.ராம்.ராஜகாரியர் சுமார் பதினைந்து ஆண்டுகள் பதவியில் இருந்தார். சம்பளம், அலவன்ஸ், சிறப்புரிமைகள் எல்லாம் அக்கால கட்டத்தில் அவருக்கு வழங்கப்பட்டன.

இப்போது நாட்டில் உள்ள ஒன்பது மாகாண சபைகளின் பதவிக் காலமும் காலாவதியாகி விட்டது. எனினும் ஒன்பது சபைகளின் அவைத் தலைவர்களும் தொடர்ந்தும் பதவியில் உள்ளனர். புதிதாகத் தேர்தல் நடைபெற்று புதிய அவைத் தலைவர்கள் தெரிவாகும் வரை அவர்கள் பதவியில் இருப்பர். அது எப்போது நடக்குமோ தெரியாது. ஆனால் அதுவரை பதவியில் இருக்கும் உரித்து அவர்களுக்கு உண்டு. அது சட்டம்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி இது விடயத்தில் ஒன்பது மாகாணங்களுக்கும் பொதுவாக ஏதேனும் தீர்மானம் எடுத்து அந்த வசதிகள் அவர்களுக்குக் கிட்டுவதைத் தடுக்கக் கூடியதான ஏற்பாடு எதற்கும் சட்டத்தில் இடமிருக்கக் கூடும். ஆனால் அதைத் தவிர அவர்களின் அந்த உரித்தை – தடை செய்ய – வேறு வழி ஏதும் இல்லை.

இந்த உரித்தை வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.சிவஞானமும் அனுபவித்து வருகின்றார். எனினும் தமது ஆளணி தொடர்பாகத் தமக்கிருக்கும் முழு உரித்தையும் அவர் பயன்படுத்தவில்லை. தேவையில்லை என்று கருதி சுருக்கியிருப்பார் போலும்.

ஆனால், இந்த உரித்து அவருக்கு வழங்கப்படுவது புதிதாக ஆளுநர் பதவிக்கு வந்துள்ளவரின் கண்களை உறுத்துகின்றது போலும். அதற்கு ஆப்புவைக்கத் துடிக்கின்றார் அவர்.

அவைத் தலைவரின் வாகனத்தை ஒப்படைக்கக் கோரி அதிகாரிகளை அனுப்பியிருக்கின்றார் அவைத் தலைவரிடம்.

"அப்படியா? நல்லது. எழுத்தில் வாங்கி வாருங்கள்." – என்று அவைத்தலைவர் அதிகாரிகளைத் திருப்பி அனுப்பியிருக்கின்றார் என்றும் கேள்வி.

எழுத்தில் கொடுத்தால், ஆளுநர் நீதிமன்றத்தில் நிற்பார். ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தொடர்பில் ஆளுநருக்கு நிறையவே படிப்பினைகள் உண்டு. சில சமயங்களில் அவரைத்தான் இவ்விடயத்தில் அவர் நீதிமன்றத்தில் சந்திக்க வேண்டியிருக்கும்.

ஒன்பது மாகாணங்களின் அவைத் தலைவர்களும் தங்களுக்குள் சங்கம் அமைத்துச் செயற்படுகின்றார்கள். அந்தச் சங்கம், தொழிற்சங்கமாக மாறி முதல் முஸ்தீபை வடக்கு மாகாண ஆளுநருக்கு எதிராகத் திருப்புவதற்கான வெற்றிலையை ஆளுநரே வைக்கின்றார் போலும். நல்லது. விளைவுகளை எதிர்கொள்வார்.

வடக்கு மாகாண சபை சபா மண்டபத்திலும் புதிய ஆளுநருக்கு 'ஒரு கண்' இருப்பதாகத் தெரிகின்றது. தனது கூட்டங்களைத் தான் அங்கு நடத்த முடியாதா என்று அதிகாரிகளிடம் அவர் திரும்பத் திரும்பக் கேட்கிறார் எனவும் தகவல்.

அவைத் தலைவர் பதவியில் சிவஞானம் இருக்கும்வரை அதற்கு இடமளிக்கமாட்டார் என்பதால் அவரை நெட்டித்தள்ளும் முட்டாள்தன முயற்சி முன்னெடுக்கப்படுகின்றதோ என்று சந்தேகிக்கிறேன்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, நாடளுமன்ற அமர்வுகள் இடம்பெறாமல் இருந்தால், நாடாளுமன்ற சபா மண்டபத்தில் அமைச்சரவைக் கூட்டத்தை ஜனாதிபதி நடத்தலாமா?

அத்தகைய கேலிக் கூத்துத்தான் வடக்கு மாகாண சபையின் சபா மண்டபத்தில், அவைத் தலைவர் கதிரையில் தாம் அமர்ந்திருந்து கூட்டம் நடத்தத் திட்டமிடும் இந்தப் பிரபலத்தின் போக்கும்.

அதிகாரிகள் மீதான அவரின் பாய்ச்சல் எழுதப் புறப்பட்டால் நீண்ட பட்டோலை.

பெரும்பான்மையினத்தவரான பிரதம செயலாளர் மீதும் தமது காய்ச்சலை அவர் காட்டியுள்ளார்.

"நான் பிரதம செயலாளர் பதவிக்கு விரும்பி வரவில்லை. கேட்டமையினால் பதவியை ஏற்றேன். எந்த நேரமும் பதவி துறக்கத் தயாராகவே உள்ளேன். முடிந்தால் அனுப்பி விட்டீர்களானால் நான் சந்தோசமாகவே போவேன்" – என்றார் அவர்.

பல அதிகாரிகள் அவரின் வழியில் தான் உள்ளனர்.

பிரதம செயலாளர் அலுவலத்தின் எரிபொருள் விநியோக ஓடர் புத்தகத்தை தன் பாதுகாப்பில் ஒப்படைக்கவும் உத்தரவிட்டிருக்கின்றார் ஆளுநர். உத்தியோகத்தர்களுக்கான அலவன்ஸ் அனுமதி படிவத்திலும் ஒரு கண் வைத்திருக்கின்றார் என்று கேள்வி.

இதற்கிடையில் – அவருக்கு உரித்தான சிறப்புரிமைகள், வசதிகள் குறித்து சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பினால் அது அவர் பார்வையில் ராஜதுரோகமாகி விடுகின்றது.

வடக்கு மாகாண சபையின் கீழ் தற்போது நிர்வாக சேவை தரத்திலான 56 உத்தியோகத்தர்கள் உள்ளனர். அவர்களில் எவரது அன்பையோ, ஒத்துழைப்பையோ பெறாத ஒருவராகத்தான் ஆளுநர் கதிரையில் அவர் அமர்ந்திருக்கின்றார்.

அது எப்படிச் சாத்தியம்? சிவாஜிலிங்கம் கூறியமை ஒன்றுமட்டுமேதான் காரணம்.

அது – அதி உத்தரமரின் எடுபிடி அல்லது போடுதடி என்ற தகைமை மட்டும்தான்.

மக்களினதும் அதிகாரிகளினதும் அன்பை வெல்லாமல் காரியமாற்றலாம் என்ற இராணுவ சிந்தனைப் போக்கில் அரசுத் தலைமை. அந்த வழியில்தான் அதன் ஏவல் நியமனங்களும் கூட.

என்ன செய்வது? இதெல்லாம் வடக்குத் தமிழர்களின் தலையெழுத்து.

– மின்னல் –

## இராணுவ ஆட்சிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய மக்கள் சக்தி என்பது நாட்டில் இதுவரை இல்லாத பொது அரசியல் அத்தியாயத்தை முன்னெடுப்பதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு. டீல் அரசியல் கலாசாரத்தை இல்லாமல் செய்து நாட்டின் எதிர்காலத்துக்கும், நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்குமான அமைப்புதான் இது.

இது தனி நபருக்கானதோ அல்லது ஓர் இனத்துக்கானதோ அல்ல. நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல விரும்புபவர்கள் அனைவரும் இணைந்து பயணிக்கின்றார்கள். ஊழல், கொள்ளைகள் இல்லாத ஓர் அரசை உருவாக்குவதே எமது நோக்கம். மத்திய வங்கி கொள்ளையில் ஈடுட்டவர்கள் எவ்வாறு எம்மோடு இணைய வருவார்கள்?

சுசில் பிரேமஜயந்தவை பதவி நீக்கிய விடயமானது, தலைவலிக்கு தலையணையை மாற்றுவது போன்ற வேலை. மக்கள் இந்த அரசுக்குக் கொடுத்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தவில்லை.

முழுவதும் கண்துடைப்பாகச் செய்கிறார்கள். இதனை மாற்ற வேண்டும். இதற்குப் புதிய மக்கள் சக்தியை உருவாக்க வேண்டும். அதற்கான வாய்ப்பை மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கில் எம்மால் கடந்த அரசில் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத் திட்டமானது மக்களின் பங்களிப்புடன் கூடியதாகவே ஆரம்பிக்கப்பட்டது. இதனை நாம் நடைமுறைப்படுத்தினோம்.

தற்போதைய அரசுகொள்ளையடிப்பதில்தான் குறியாக இருக்கிறார்கள். இதனால் மக்களுக்கு எப்படி வீட்டுத் திட்டத்தை அவர்களால் வழங்க முடியும்? நான் இந்த நாட்டின் ஜனாதிபதியாகி இந்த மக்களின் வீட்டுத் திட்டப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை வழங்குவேன் என உறுதியளிக்கின்றேன்.

ஊடகம் என்பது ஜனநா யகத்தைப் பாதுகாப்பதற்காக இருக்கும் மிகப்பெரிய சக்தி என நான் நம்புகின்றேன். மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்துவது ஊடகவியலாளரின் கடமை. இவ்வாறு உண்மைகளை வெளிப்படுத்திய ஊடகவியலாளர்கள் பலர் இன்னல்களை எதிர் நோக்கியுள்ளார்கள்.

அவ்வாறு பாதிப்படைந்த அல்லது உயிரிழந்த ஊடகவியலாளர்களுக்கு நாம் ஆட்சிக்கு வந்ததும் அரசு என்ற வகையில் எம்மால் முடிந்த சலுகைகளைப் பெற்றுக்கொடுப்போம்.

ஐக்கிய மக்கள் சத்தியின் பயணம் தொடர்கின்றது. இந்தப் பயணத்தில் வடக்கு அரசியல், தெற்கு அரசியல் என்று இல்லை. இதில் எந்தவித பிரிவினைகளும் கிடையாது.

இலங்கை என்பது ஒரு நாடு. நாம் அதன் பிரஜைகள் என்ற அடிப்படையில்தான் பணியாற்று வோம். மக்களது பிரச்சினைகளை நாம் கட்டம் கட்டமாகத் தீர்த்து வைப்போம். இதில் எந்தவித வேறுபாடும் கிடையாது – என்றார்.

## கோட்டா அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று ஒருபுறத்தில் நம் அனை வருக்கும் நன்கு அறிந்த விடயமாக எரிவாயு வெடிப்புச் சம்பவம் உள்ளது. மறுபுறத்தில் உரப் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

இருந்தும் அரசால் அரச ஊழியர்களுக்கு 5 ஆயிரம் ரூபா மேலதிக கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. எல்லா விடயங்களிலும் பணத்தை வழங்க முடியாது.

அரசு 5 ஆயிரம் ரூபா வழங்கிவிட்டதற்காக நம் நாட்டில் டொலர் பற்றாக்குறை தீரப் போவதும் இல்லை; பால்மா விலை குறையப் போவதும் இல்லை.

மருந்து வாங்க, விவசாயிகளுக்கு உரம் பெற்றுத் தர, குழந்தைகளுக்குப் பால்மா பெற்றுத் தர இங்கு டொலர் இல்லை.

இந்தநிலை தொடருமாயின் புதுவருடத்துக்குள் அரிசியின் விலை அதிகரித்துக் கொண்டே போகும்.

அரசிலுள்ள அமைச்சர்களை மாற்றினால் தீர்வு கிடைக்காது. அனைவரும் ஒன்று சேர்ந்தால் தீர்வு கிடைக்கும் என்று சிலர் நினைக்கின்றனர். அவ்வாறு நடக்காது.

எனவே, இந்தச் சூழ்நிலையில் சிறந்த தலைவர்களைத் தேர்ந்தெடுப்பது சிறந்த விடயம் – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622




சாரதி தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கொழும்பு சென்று வரக்ககூடிய கனரக வாகன சாரதி தேவை
தொடர்புகளுக்கு -
0770266833
0774449705



# இராணுவ ஆட்சியை நோக்கி நகருகிறது இலங்கை அரசு?



## ரஞ்சித் மத்தும பண்டார சாடல்

அரசாங்கம் இராணுவ ஆட்சி நோக்கி நகர்கின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது என ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி எழுப்பியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்துமபண்டார இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார்.

அரசாங்கம் நாடாளுமன்றை மூடி இராணுவ ஆட்சி நோக்கிநகர்கின்றதாஎனஅவர்கேள்விஎழுப்பியுள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு -

ஜனநாயகத்தை உறுதி செய்வதற்கு மக்களுக்காகப் பேசக்கூடிய நாடாளுமன்றம் ஒன்றரை மாதங்களாக மூடப்பட்டுள்ளது. நாட்டில் பாரிய பிரச்சினைகள் உருவாகியுள்ளன.

பொருள்கள் இல்லை. பால் மா, சீனி, எரிவாயு, மண்ணெண்ணை என பலவற்றுக்கும் வரிசையில் காத்திருக்க நேரிட்டுள்ளது. அரிசியின் விலைவானளவு உயர்ந்துள்ளது, மரக்கறிகள் விலையும் உயர்த்தப்பட்டுள்ளது.

இவற்றைப் பேசுவதற்கு நாடாளுமன்றைக் கூட்ட வேண்டும். நாடாளுமன்றை ஒத்தி வைத்து திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பணம் மேலும் மேலும் அச்சிடப்படுகின்றது.

ஜனாதிபதி நாடாளுமன்றை உடனடியாகக் கூட்ட வேண்டுமெனக் கோருகின்றோம். நாட்டின் நிதி கட்டுப்பாடு நாடாளுமன்றுக்கே உண்டு. ஊடகங்கள் தங்களது பணியை மேலும் வலுவாகச் செய்ய வேண்டும்.

25 ஆயிரம் ரூபாவால் பொருள்களின் விலையை உயர்த்தி அரசாங்கம் ஐயாயிரம் ரூபாவை வழங்கி வருகின்றது என ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

# ஊடக அமைய அலுவலகம் வவுனியாவில் திறந்துவைப்பு





வவுனியா ஊடக அமையத்தின் அலுவலக திறப்பு வவுனியா வைரவப்புளியங்குளத்தில் ஊடக அமையத்தின் தலைவர் எம்.ஜி.ரெட்னகாந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.ஏ. சரத்சந்திரவும் சிறப்பு விருந்தினர்களாக வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன், வவுனியா நகரசபை செயலாளர் ஆர். தயாபரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ்.சந்திரகுமார், வவுனியா ஓட்டோ உரிமையாளர் சங்கத்தலைவர் சி.ரவீந்திரன், வவுனியா பஸ் உரிமையாளர்கள் சங்கத்தலைவர் கே.இராஜேஸ்வரன், வர்த்தகர் சங்கச் செயலாளர் ஆ.அம்பிகைபாகன், காஞ்சனா நகையக உரிமையாளர் க.செல்வராசா, மாவட்ட செயலக தகவல் உத்தியோகத்தர் உபுல் பாலசூரியவும் கலந்து கொண்டனர்.

வவுனியா ஊடக அமையத்துக்கான நிதி உதவி மற்றும் அலுவலக தளபாடங்கள் உட்பட பல்வேறு உதவிகளை அப்ரியல் அமைப்பின் பணிப்பாளர் ரவீந்திர டீ சில்வா வழங்கி வைத்தார்.

# நாட்டின் பொருளாதாரம் அரசால் முற்றாக அழிப்பு!

## அநுர குற்றச்சாட்டு

இலங்கையின் பொருளாதாரம் ராஜபக்ஷ அரசால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது எனத் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திசாநாயக்க குற்றஞ்சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

சீனாவிடம் இருந்து கடன்பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருந்தபோது, கொழும்பு துறைமுக நகர் அபிவிருத்தித் திட்ட சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

அதேபோல், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இந்தியாவுக்குச் சென்று கடன் கோரியுள்ள நிலையில், திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் தாரைவார்க்கப்படுகின்றன. அரசின் உண்மை நிலை தொடர்பான விவரங்களை வெளியிடுவோர் பதவியில் இருந்து நீக்கப்படுகின்றனர்.

இவ்வாறு முறையற்ற நிர்வாகத்தால் நாட்டின் பொருளாதாரம் மேலும் பின்னடைவை எதிர்நோக்கி வருகின்றது எனத் தெரிவித்துள்ளார்.

# வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக கடமைகளை ஏற்றார் இளஞ்செழியன்!



வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

வடக்கு, கிழக்கு மாகாண மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான இடமாற்றம் தலைமை நீதியரசரால் வழங்கப்பட்டிருந்தது

அதன் அடிப்படையில் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன், வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டமையுடன், வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன், யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டிருந்தார்.

இந்நிலையில் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டிருந்த மாணிக்கவாசகர் இளஞ்செழியன் கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். அவருக்கு நீதிமன்ற வளாகத்தில் நீதிபதிகள், சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்களால் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவில் விற்பனையாகும் இலங்கைப் பெண்கள்!

## வெளியான அதிர்ச்சித் தகவல்

இலங்கையிலுள்ள இளம் பெண்கள் சீனாவில் தகாத வர்த்தக நடவடிக்கைக்கு விற்பனை செய்யப்படுகின்றனர் என அதிர்ச்சித் தகவல் வெளியாகி உள்ளது.

இலங்கைக்கு வரும் சீன நாட்டவர்கள் திருமணம் என்ற பெயரில் பல இளம் பெண்களை சீனாவுக்கு அழைத்துச் செல்கின்றனர் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

அவ்வாறானவர்களை அந்நாட்டில் தவறான நடத்தைக்கு பயன்படுத்தி விற்பனை செய்யப்படுகின்றனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் இந்த வலையில் சிக்கிய ஹொரணை பிரதேசத்தை சேர்ந்த இளம் பெண் ஒருவர் காணாமல் போயுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

சீன மோசடியாளர்கள் தகாத வர்த்தக நடவடிக்கைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளாரா என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். பொலிஸ் மா அதிபரின் உத்தரவில் குற்ற விசாரணை திணைக்களம் விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது.

குறித்த இளம் பெண் தொடர்பில் சீன நாட்டவர்களால் மறைக்கப்பட்டார்களா அல்லது வேறு அழுத்தம் காரணமாக மறைந்துள்ளாரா என இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது.

அவ்வாறான 10 பெண்கள் தொடர்பில் கிடைத்துள்ள தகவல்களுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்குமாறு பொலிஸ் மா அதிபர் இதற்கு முன்னர் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய கொள்கலன்களை விடுவிக்க யோசனை

கொழும்பு, ஜன. 08

டொலர் பற்றாக்குறை காரணமாக, கொழும்பு துறைமுகத்தில் தேங்கியுள்ள அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய ஆயிரத்துக்கும் அதிகமான கொள்கலன்களை விடுவிப்பதற்கு வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவால் மத்திய வங்கிக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, இறக்குமதியாளர்களின் பொருள்களின் விவரங்கள் அடங்கிய அறிக்கையும், மத்திய வங்கிக்கு கையளிக்கப்பட்டது என வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில், வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கும், மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது, இறக்குமதியாளர்களுக்கு அவசியமான டொலரை, இன்று விடுவிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என வர்த்தக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அந்நிய செலாவணிக் குளறுபடி

புத்தாண்டின் முதல் அமைச்சரவைக் கூட்டம் கடந்த திங்களன்று – மூன்றாம் திகதி – நடைபெற்றமையை அடுத்து, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ விடுத்த தாராள அறிவிப்புக்களைப் பார்த்து, எல்லோரும் மதி மயங்கித்தான் போனார்கள். தாங்கள் உண்மையில் இலங்கையில்தான் இருக்கின்றார்களா என்று தங்களைத் தாங்களே நுள்ளிப் பார்க்கும் நிலைமை மக்களுக்கு. அவ்வளவு தூரம் அதிசயமாக இருந்தன நிதி அமைச்சரின் தாராள அறிவிப்புகள்.

அரச ஊழியர்களுக்கும், ஓய்வூதியர்களுக்கும் மாதாந்தம் மேலதிகமாக ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு, சமுர்த்தி பயனாளிகளின் மாதாந்தக் கொடுப்பனவு ஆயிரம் ரூபாவால் அதிகரிப்பு, அத்தியாவசியப் பொருள்களுக்கான இறக்குமதி வரி முற்றாக விலக்கல், விவசாயிகளின் பயிர்ச் செய்கைக் காணிகளின் விஸ்தீரணத்துக்கு ஏற்ப உதவிக் கொடுப்பனவு, மலையக மக்களுக்கு குறைந்த விலையில் மா என்று சுமார் 23 ஆயிரம் கோடி ரூபாவுக்கான உதவித் திட்டங்களை நிதி அமைச்சர் அறிவித்த போது எல்லோரும் அசந்துதான் போனார்கள்.

இது கடன் வாங்கிக் கலியாணம் போன்றது. நடைமுறைக்கு சரிப்பட்டு வராது. 'வரவு எட்டணா, செலவு பத்தணா, கடைசியில் துந்தணா, துந்தணா' என்ற மாதிரி இது துந்தணா அறிவிப்புத்தான் என இப்பத்தியிலேயே சுட்டிக்காட்டியிருந்தோம்.

அதுதான் நிஜம் என்பது இப்போது தெளிவாகி வருகின்றது.

நாட்டின் அந்நிய செலாவணிக் கையிருப்பு ஏதோ அதிசயமாக உயர்ந்தது போல 310 கோடி அமெரிக்க டொலரை எட்டியுள்ளது என்று வருட இறுதியில் படம் காட்டினார் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால்.

சீனக் கடன் கொடுப்பனவுகளுக்கும், சீனப் பொருள்களின் இறக்குமதிக்கும் என சீனா வழங்கிய மேலதிக கடன் இது. அந்தத் திட்டங்களுக்கு மட்டுமே இதனைப் பயன்படுத்த முடியும். அதையும் தாண்டி பிற அத்தியாவசியப் பொருள்களின் தேவைகளுக்கு இதனைப் பயன்படுத்த முடியாது என்று சில தரப்புகள் அப்போதே குறிப்பிட்டன. அதனை இப்பத்தியிலும் சுட்டிக் காட்டியிருந்தோம். இப்போது கட்டவிழும் விடயங்கள் அதுசரிதான் என்பதை நிரூபிக்குமாற் போல அமைகின்றன.

பக்றீரியாத் தொற்றுள்ள சேதனப் உரத்தை சீனா அனுப்பியதால் அதை இறக்காமல் திருப்பி அனுப்பிய இலங்கை, அதற்கான கொடுப்பனவை வழங்காமல் இழுத்தடித்தமையுடன், அந்த விடயத்தை ஒட்டி நீதிமன்றத்தில் வழக்குப் போட்டு, கொடுப்பனவு வழங்குவதற்கு எதிராக நீதிமன்றத் தடை உத்தரவையும் பெற்றுக் கொண்டது.

ஆனால், இப்போது மா இறக்குமதிக்குக் கூட அந்நிய செலாவணிக் கையிருப்பு இல்லை. மருந்து வகைகள் உட்பட அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளவும் அந்நிய செலாவணி இல்லை எனக் கைவிரிப்பு.

ஆனால், இலங்கையில் இறக்கப்படாத சீனாவின் சேதன உரத்துக்கான கொடுப்பனவை, நீதிமன்றத்தில் விண்ணப்பித்து, நீதிமன்றத் தடை உத்தரவை விலக்கி, அதற்கான பணம் டொலரில் செலுத்தப்பட்டு விட்டது.

அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்ய அந்நிய செலாவணி இல்லை. ஆனால் வராத உரத்துக்கு கொடுப்பனவு செலுத்த அந்நிய செலாவணி இருக்கின்றது.

அப்படியானால், சீனப் பொருள்களுக்கும், சீனக் கொடுப்பனவுக்கும் பயன்படுத்தக் கூடிய கட்டுப்பாடுடன் கூடிய அந்நிய செலாவணிதான் மிச்சம் இருக்கின்றது என்ற கூற்று உண்மைதான் போலும்.

## கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டத்தில் அக்கரைப்பற்று மாநகர சபை சாதனை

### முதல்வர் அதாவுல்லா அகமட் ஸகி பெருமிதம்



கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டத்தில் அக்கரைப்பற்று மாநகர சபை குறுகிய காலப் பகுதிக்குள் 37 உள்ளூர் வீதிகளை அமைத்திருப்பதானது உள்ளூராட்சி வரலாற்றில் சாதனையாகும் என்று அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதா வுல்லா அகமட் ஸகி தெரிவித்தார்.

அக்கரைப்பற்று மாநகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான முதலாவது மாநகர பொதுச்சபை அமர்வு கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது. இதன்போதே முதல்வர் மேற்படி உரையாற்றினார்.

தொடர்ந்தும் அங்கு அவர் உரை நிகழ்த்துகையில் தெரிவித்தவை வருமாறு: -

அக்கரைப்பற்றின் வரலாற்றில் இது வொரு மைல் கல் சாதனை என்றே சொல்ல வேண்டும். 2021 ஆம் வருடத்தில் நமக்கு வழங்கப்பட்டிருந்த 50 வீதிகளில் இதுவரை 37 வீதிகளைப் பூரணமாக அபிவிருத்தி செய்திருக்கின்றோம். உண்மையில் இந்த விடயம் மிகுந்த மகிழ்ச்சிக்கும் பெருமைக்குமுரியதுமாகும்.

ஏனைய வீதிகளின் நிர்மாணப் பணிகளையும் வெகு துரிதமாக அபிவிருத்தி செய்து மக்களிடம் கையளிப்பதற்கு நாம் ஒருமித்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இந்த விடயத்தில் எனக்கு ஒத்துழைப்பு நல்கிய மாநகர சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், உரிய அதிகாரிகள் அனைவருக்கும் இந்த வேளையில் மானசீகமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும், கொவிட் பெரும் தொற்று வேளையிலும் அக்கரைப்பற்று மண் வெகுவாக நிலை குலைந்து போனது. அதிலிருந்தும் நாம் இப்போது மீண்டு வந்திருக்கின்றோம்.

எஞ்சி இருக்கும் காலத்திலும் எமது மக்களின் சுபீட்சமான எதிரகாலத்துக்காகவும், வாழ்வியல் முன்னேற்றத்துக்காகவும் நாம் அனைவரும் ஒத்த கருத்தில் பயணிக்க வேண்டும் என்று இந்த உயரிய சபையை வேண்டுகின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், சபை அமர்வின் போது 2022 ஆம் ஆண்டுக்கான நிலையியல் குழுக்கள் தெரிவு செய்யும் நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## படுகொலை செய்யப்பட்ட லசந்தவுக்கு இன்று மட்டக்களப்பில் நினைவு நிகழ்வு



இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் 13 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று (சனிக்கிழமை) காலை மட்டக்களப்பில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இன்று (சனிக்கிழமை) காலை மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு. ஊடக அமையம் என்பன இணைந்து இந்த நிகழ்வை நடத்தவுள்ளன.

இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு மட்டக்களப்பு நகரில் உள்ள இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவுத்தூபியில் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு அஞ்சலி செலுத்தப்படும்.

அதனைத் தொடர்ந்து மட்டு. ஊடக அமையத்தில் சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் திருவுருவப்படத்துக்கு நினைவுச்சுடர் ஏற்றப்பட்டு நினைவஞ்சலி நிகழ்வு நடைபெறும்.

இந்த நிகழ்விற்கு ஊடகவியலாளர்கள், அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், பொது அமைப்புகளின் பிரமுகர்கள், மதத் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## நாட்டில் ஐந்து நாள்களில் 1,227 டெங்கு நோயாளர்!



2022 ஆம் ஆண்டில் முதல் ஐந்து நாள்களுக்குள் 1,227 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் எனத் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், டெங்கு நோயைப் பரப்பும் பிரதான 4 வகையான வைரஸ் வகைகளின், மூன்றாவது வைரஸ் வகையால் தொற்றுக்குள்ளாகிய டெங்கு நோயாளர்களும் இலங்கையில் பதிவாகியுள்ளனர் எனத் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின், சமூக வைத்தியர் அனோஜா தீரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

இந்த நிலையைக் கட்டுப்படுத்துவதற்காக நாடளாவிய ரீதியில் டெங்டகு ஒழிப்புத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

இந்த வேலைத் திட்டம் ஜனவரி 04 முதல் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை இடம்பெறும். இதற்காக முப்படையினர், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினரின் ஒத்துழைப்பும் கிடைத்துள்ளது.

இதற்கமைய, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, குருநாகல், புத்தளம், காலி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் இரத்தினபுரி ஆகிய டெங்கு அவதானம் கூடிய மாவட்டங்களில் இந்த வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிட வேண்டிய என்னை விமர்சித்து இன்று நாடாளுமன்றம் அனுப்பியுள்ளார்கள்!






## சாணக்கியன் கருத்து

பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிட வேண்டிய என்னை விமர்சித்து நாடாளுமன்ற உறுப்பினராக மாற்றி விட்டார்கள். தற்போது என்னை விமர்ச்சித்து விமர்சித்து என்ன பதவி கிடைக்க போகின்றது என்று எனக்கு தெரியாமல் உள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள பல்வேறு பாடசாலையில் தரம் 5 இல் கல்வி பயிலும் மாணவர்களின் நலன் கருதி இராசமாணிக்கம் அமைப்பால் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் வழங்கி வைக்கும் நிகழ்வு கல்முனை – பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயத்தில் நடைபெற்றபோது அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அங்கு தனது கருத்தில் அவர் தெரிவித்தவை வருமாறு –

மாகாண சபை முறைமையைப் பல வீனமாக்க வேண்டும் என்ற விடயத்தில் மிகவும் அக்கறையாக கிழக்கு மாகாண ஆளுநர் தொடக்கம் அதிகாரிகள் சிலரும் இருக்கின்றமை நிதர்சனமான உண்மையாகும்.

இந்த வருடம் கிழக்கு மாகாணத்துக்கென ஒதுக்கப்பட்ட நிதி நிலைமையை நோக்குவோமாயின் கவலையாகவே உள்ளது. இவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதிகளில் நிர்வாகத்துக்கே நிதிகள் வழங்கப்பட்டுள்ளனவே தவிர மேலதிகமாக வேலைத்திட்டங்களை செய்வதற்கான நிதிகள் வந்து சேரவில்லை. இவ்வாறு உள்ள நிலையில் மாகாண பாடசாலை விடயத்தில் எவ்வாறான அபிவிருத்திகளை மேற்கொள்வது என்பது சவாலான விடயமாகும். அத்துடன் எமக்கான அரசியல் தீர்வு ஒன்று கிடைக்காமல் விட்டால் முழுமையாக எமது வேலைத்திட்டங்களைச் செய்ய முடியாது.

கடந்த 74 ஆண்டுகளாகவே தீர்வு நிலைமை தொடர்ந்து வருகின்றது. எமக்கென அதிகாரங்கள் எமது கைகளில் இருக்க வேண்டும். இன்று கல்முனை என்றாலே கல்முனை வடக்கு பிரதேச செயலகம் மட்டும் தான் பேசப்படும் விடயமாகும். கல்முனை என்று இன்று நான் சொன்னால் கூட எனக்கு எதிராக விமர்சனங்கள் வரும். மாணவர்களின் கல்வி தொடர்பில் அக்கறையை நாம் செலுத்த வேண்டுமாயின் நிரந்தர அரசியல் தீர்வை அடைய வேண்டும்.

இதை விட நான் தமிழ் மக்கள் என கூறுகின்றமை தமிழ், இஸ்லாம், கிறிஸ்தவ மக்களையே நான் கூறு கின்றேன். இதனை 3 ஆகப் பிரித்து சொல்ல வேண்டிய அவசியமில்லை. எமக்கு மாகாண சபையின் ஊடாக நிதி அதிகாரமிருந்தால் நாங்கள் ஆளுநரிடம் பிச்சை கேட்பது அவசியமில்லை.

சில விடயங்கள் நாம் காலில் விழுந்து கேட்டால் கூட கிடைக்கப்பெறாத நிலைமையிலே உள்ளது. தற்போது கூட வந்த வளங்கள் அனைத்தும் உகண, தமண, தெஹியத்த, கண்டிய, பதியத்தலாவ அந்த பிரதேசங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதனை நாங்கள் வெளிப்படையாகச் சொன்னால் இவர் துவேசமாகக் கதைப்பதாகக் கூறுவார்கள். எனவேதான் இவ்வாறான வளங்களைப் பெறுவதற்கு தமிழ் மக்களாகிய நாங்கள் ஒன்றாக வாழ்வதற்கு இணங்க வேண்டும்.

அப்படி இல்லாமல் நாம் சண்டைபிடித்துக் கொண்டு இருப்போமாயின் எமது வளங்கள் வேறு இடங்களுக்கு போய் விடும். எதிர் வரும் மாகாண சபைத் தேர்தலாக இருக்கட்டும் அல்லது அரசியல் தீர்வாகவும் இருக்கட்டும் இரு சமூகமும் ஒன்றாக இருக்காவிடின் தமிழ் பேசாத ஒரு முதலமைச்சர் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன என்பதை இந்த விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அது ஒரு சதித்திட்டமாகும். இந்த இடத்தில் இந்த விடயத்தைக் கூறுவதற்குக் காரணம் கல்வியியலாளர்களாகிய நீங்கள் சமூகத்தில் பல்வேறு கருத்துக்களைக் கொண்டுசெல்லக்கூடியவர்கள். ராஜபக்ஷ குடும்பத்தினுள் அடிபிடி பிரச்சினைகள் உள்ளன. அந்த வகையில் இருசமூகங்களுக்கு இடையில் பிரச்சினை எழுவது தவிர்க்க முடியாத விடயமாகும்.

ஆகவே, இவற்றை எப்படிப் பேசி தீர்க்கலாம் என்பதை ஆராய வேண்டும். இதற்கு உங்களை போன்ற புத்திஜீவிகளின் ஆதரவு எமக்குத் தேவையாகும். எமக்கு நிதி அதிகாரம் கிடைக்கப்பெற்றால் வெளிநாடுகளில் இருந்து நேரடியாக நிதிகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். இலங்கையில் சாப்பிடப் கூட வழி இல்லாமல் மக்கள் இருக்கின்றார்கள்.

அரசியல் தீர்வில் தான் எமது மக்களின் பொருளாதார அபிவிருத்தியும் தங்கி இருக்கின்றது .எனவே, எதிர்காலத்திலாவது நாம் சிந்தித்து செயற்பட வேண்டும். தமிழ் மக்களைக் கடந்த காலங்களில் அடித்தமையால் களைத்துவிட்டார்கள் என்பது தான் அரசாங்கத்தின் தற்போதைய நிலைப்பாடு. 40 வருடங்களாகத் தமிழர்களுக்கு அடித்து விட்டோம். இனி அவர்களுக்கு அடித்தால் சிங்கள மக்களிடம் எடுபடாது என்பதை அரசாங்கம் புரிந்துகொண்டுள்ளது. அடுத்த 20 வருடங்களுக்கு இஸ் லாமிய மக்களை தான் குறி வைக்கப் போகின்றார்கள்.

இதனை அந்த மக்கள் உணர்ந்து விட்டார்கள். இதனால் மொட்டுக்கு அவர்கள் தேர்தலில் வாக்களிக்கவில்லை. எனவே, கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களை மறந்து எதிர்காலத்தில் பயணிப்பதற்கு நாங்கள் தயார். ஒரு சிலர் இருக்கலாம் ஏனைய மக்களுடன் வாழலாம் என நினைக்கலாம்.

இன்றுதமிழ்சமூகம்உணர்ந்துள்ளது. இரு சமூகமும் ஒன்றாக சேர்ந்து வாழ வேண்டும் என வந்திருக்கின்றார்கள். இதற்கும் எனக்கு விமர்சனங்கள் வரலாம். எனக்கு விமர்சனம் தான் எனது வளர்ச்சியில் கூட பாதை அமைத்து தந்திருக்கின்றது.

பிரதேச சபைத் தேர்தல் கேட்க வேண்டிய என்னை விமர்சித்து நாடாளுமன்ற உறுப்பினராக மாற்றி விட்டார்கள். தற்போது இன்று என்னை விமர்சித்து விமர்சித்து என்ன பதவி கிடைக்க போகின்றது என்று தெரியாது. எனவே, இனிவரும் காலங்களில் இரு சமூகமும் ஒன்றாக சேர்ந்து வாழ வேண்டும்.

அம்பாறை மாவட்டத்தில் குடியேற்ற திட்டங்கள் மிக வேகமாக நடைபெற்று வருகின்றன. ஒரு நாளுக்குள் 10 ஆயிரம் ஏக்கர்கள் ஓர் இரவுக்குள் பறிக்கப்படுகின்றன. இனியாவது இவ்வாறான விடயங்களுக்கு இடங்கொடுக்காது இரு சமூகமும் பார்க்க வேண்டும். 2022 ஆண்டு நாட்டில் பொருளாதார சிக்கல்கள் வரலாறு காணாத வகையில் வரும். 4 மற்றும் 5 ஆம் மாதங்களில் உணவு பஞ்சம் வரும். தெற்கில் மக்கள் வீதியில் இறங்கிப் போராட ஆரம்பித்துள்ளார்கள். எனவே, அவர்களில் சிலரை இணைத்து நாம் புதிய அரசியல் பாதையில் செல்லவேண்டும் என்பதே எனது அவாவாகும். எனத் தெரிவித்தார்.

# பொதுநலவாய நாடுகளின் விளையாட்டு விழாவுக்கான கோல் அலரி மாளிகையில்!



பிரித்தானியாவின் பர்மிங் ஹாம் நகரில் இம்முறை நடைபெறவுள்ள 22 ஆவது பொது நலவாய நாடுகளின் விளையாட்டு விழாவை முன்னிட்டு உலகளாவிய ரீதியில் 72 நாடுகளுக்கு கொண்டு செல்லப்படுகின்ற மாகாராணியின் கோல் வியாழக்கிழமை பிற்பகல் அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் வரவேற்கப் பட்டது.

25 ஆவது நாடாக கடந்த 03 ஆம் திகதி மாலைதீவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட கோல் மூன்று தினங்களாக நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் கொண்டு செல்லப்பட்டு வியாழன் அலரி மாளிகைக்குக் கொண்டு வரப்பட்டது.

இளைஞர் மற்றும் விளை யாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் இந்த கோலை வரவேற்று காட்சிப் படுத்துவதற்கான ஒருங்கிணைப்பு செயற்பாடு களை முன்னெடுக்கும் பொறுப்பு இலங்கை தேசிய ஒலிம்பிக்குழுவிற்கு உத்தியோகப்பூர்வமாக வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய தேசிய ஒலிம்பிக் குழுவின் தலைவர் சுரேஷ் சுப்ரமணியம், எதிர்வரும் ஜுலை 28ஆம் திகதி பர்மிங்ஹாமில் ஆரம்பமாகும் பொதுநலவாய நாடுகளின் விளையாட்டு விழாவின் உத்தியோக பூர்வ சின்னம் மற்றும் கோலின் மூலம் வெளிப்படுத்தப் படும் கருத்தை பிரதமர் முன்னிலையில் முன்வைத் தார்.

அதனைத் தொடர்ந்து தேசிய ஒலிம் பிக் குழுவின் தலைவர் சுரேஷ் சுப்ரமணியத்தால் பிரதமரிடம் கோல் வழங்கப்பட்டது.

‘2022 குயின்ஸ் பேட்டன் ரிலே’ என நடைபெறும் இந்த விசேட காட்சிப் படுத்தல் திட்டம் பிரித்தானிய மகாராணியின் தலைமையில் கடந்த ஒக்ரோபர் மாதம் 7 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இந்தக் கோல் வியாழக்கிழமை இலங்கையிலிருந்து பங்களாதேஷிற்கு கொண்டு செல்லப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, பிரதமரின் செயலாளர் காமினி செனரத், இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் அனுராத விஜேகோன், இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் விக்ரமசிங்க, விளையாட்டு மேம்பாட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அமல் எதிரிசூரிய, தேசிய ஒலிம்பிக் குழுவின் தலைவர் சுரேஷ் சுப்ரமணியம், தேசிய விளையாட்டு கவுன்சிலின் உறுப்பினர் யஸ்வந்த் முத்தெட்டுவேகம, தேசிய ஒலிம்பிக் குழுவின் செயலாளர் மெக்ஸ்வெல் த சில்வா, தேசிய ஒலிம்பிக் குழுவின் சந்தன லியனகே, நிலு பெர்னாண்டோ, காமினி ஜயசிங்க, பளு தூக்கும் விளையாட்டு வீரர் சிந்தன விதானகே உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 245



**629. இந்திய பிரதமருக்கான சமர்ப்பணம் ஒன்று இறுதியில், வடக்கு - கிழக்குத் தமிழ்க் கட்சிகளால் ஒப்பமிட்டுக் கையளிக்கப்படும் என்று செய்திகள் வந்துள்ளனவே?**

நாரதர் கலகமாக மாறி, கடைசியில் நன்மை ஒன்றில் முடிந்துள்ளது ஆனால் அவர்கள் மட்டும்தான் கடைசியாகக் கையெழுத்து வைத்தார்கள் என்றாலும், இந்திய வம்சாவளித் தமிழ் மக்களதும், முஸ்லிம் தரப்புகளினதும் ஆசீர்வாதங்கள் உள்ளன, ஆட்சேபனைகள் மூலம் கோரிக்கைகளுக்கு எதிரானவர்கள் என்ற வெளிப்பாடு இல்லை என்பது நல்ல விடயம்.

வரலாற்றைப் புரிந்து கொண்டவர்களும், தேர்தலின் குறுகிய நோக்கை விட்டுத் தூரப் பார்வையில் பார்த்தவர்களும் தொடக்கத்திலிருந்தே இதுதான் அணுகுமுறையாக இருந்திருக்கவேண்டும் என்று அடித்து அடித்துச் சொன்னார்கள். ‘காலைக்கதிர்’ ஆசிரியர் வித்தியாதரன் கூட இந்த முயற்சிகளுக்கு அவர் குந்தகம் விளைவிக்கினறார் என்று எழுந்த அவதூறுகளுக்கு பதிலளித்து ஆக்கங்கள் பகிர்ந்திருந்தார். செய்தியைச் செய்தியாக மட்டும் தராமல் ஊடகம் அதிலேயே கருத்து தெரிவிப்பது வழமையாகவே கத்தி முனையில் நடப்பது போன்ற ஒன்று என அவருடன் சம்பாஷித்த போது கோடி காட்டினேன். அது அவர் அறியாதது அல்ல. கருத்துக்களுக்கு ஆசிரியர தலையங்கம் உண்டு. எதுவானாலும், அரசியல்வாதிகள் அவற்றைவிரும்புவதில்லை. ஏனெனில் அவர்களது அணுகுமுறைகளின் ஆதாயங்களை அவை குறைக்கலாம் என்று என்னப் பாங்கில்.

கடந்த நத்தார் விடுமுறை காலத்திலும், தொடர்ந்து covid -19 தொற்றுப் பயங்களினாலும் முடங்கியிருக்க வேண்டியிருந்ததால்எழுதிவந்துகொண்டிருந்த இந்த ஆக்கத்தில் பல வரலாறுகளைச் சொல்லி முடித்து விட்டேன். அவற்றுக்கு முத்தாய்ப்பு வைத்து விடலாமா என்ற எண்ணங்கள் மனத்திரையில் வந்து போயின. இன்னும் சில ஊடக நண்பர்களுக்கு உறுதியளித்தவை காற்றில் சொன்னவை போலக் கரைந்து கொண்டிருந்தன.

தமிழர் தகவல் நடுவகத்தின் சமர்ப்பணத்தின் போதும் இந்த நாரதர் கலகம் தொடர்ந்து கொண்டிருந்தது. தமிழ் மக்களின் எதிர்காலத்தை பற்றிய ஓர் இனம் அறியாத ஏமாற்ற உணர்வு 1984 - 1987 ஆம் ஆண்டு காலங்களிலும், பின்னர் 1987ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் பின் நடந்தவையால் இருந்தமை போன்று ஏற்படுத்திக் கொண்டே இருந்தது.

வரலாற்று கேள்விகளில் நான் குறித்தவற்றுக்கு அப்பால் பலர் என்னிடம் அவை பற்றி பேசியபோது மேலும் அவற்றைப் போன்றவற்றை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்றார்கள். தொடர்ந்தும் பதியுங்கள் என்று வேண்டினார்கள். பக்கச்சார்பு கொள்ளாத நிலையில், ஆயுதங்கள் தாங்கிப் போராடிய எந்தக் குழுவிலும் அங்கம் வக்கிக்காது அதன் தலைவர்கள், போராளிகளுடன் நெருங்கிப்பழகி நெறிப்படுத்தும் ஆலோசனைகள் தரவும் முயன்று, இவற்றால் பட்ட மன உளைச்சல்கள், அவற்றின் மூலம் அறிந்து கொண்ட இயக்கங்களுக்குள் இருந்த துரோகங்கள், காட்டிக் கொடுப்புக்கள், விலாசங்கள் தெரியப்படுத்தாமல் இந்திய கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட கொலைகள் என்பவை பற்றியெல்லாம் எழுதுவதென்றால் அவற்றினால் எழக்கூடிய விமர்சனங்கள் என்ற பலவற்றை சந்திக்க வேண்டியி ருந்தது. நன்மைகளையும் எடை போட் டேன்.

அதேசமயம் வேறு பல பகுதிகள், “இவ்வளவு வரலாறுகள் எழுதி விட்டீர்கள் இவையெல்லாம் நடந்து முடிந்து விட்டவை. அரசியல்வாதிகள் பெற்றுக்கொடுத்தவைகளையும் தமிழ் மக்கள் கண்டு கொண்டார்கள். விடுதலைப் போராளிகளின் அறுவடையும் பார்த்துவிட்டார்கள் முள்ளிவாய்க்காலுக்குப் பின் கடந்த 12 வருடங்களாக புலம்பெயரிலும், நாட்டிலும் தீர்வுக்காகப் புறப்பட்டவர்களி காரியங்களையும் அறிந்தாயிற்று. இந்த அனுபவங்களில், ஏதாவது வழி அல்லது எது வழி என்று சொல்வீர்களானால் அது பிரயோசனமாக இருக்கும். இந்த தொடரில் ஆக்கங்களுக்கும் அது முழுமை தரும்” - எனக் கூறினார்கள்.

பழைய வரலாறுகளில், அறிந்து கொள்ளப்படாத இருண்ட சூழல்கள் குறித்துத் தொடர்ந்தும் எழுதுவது பற்றி சிந்தித்து கொண்டு இருக்கிறேன். ஆனால் நீண்டு விடுமோ, அதன் பயன் என்ன என்று ஆதங்கங்கள் உண்டு. ஆயினும் அனுபவ ரீதியில் வழி ஒன்றாக அணுகுமுறை ஒன்றை அறிவுறுத்தினேன். அதனால் ஆசிரியர் வித்தியாதரன் மேல் சொல்லப்பட்ட அவதூறுகள் போல எனக்கு எதிராக எறியப்பட்டவைகளையும் முன்னர் கூறியிருந்தேன்.

**630. அது தமிழர் தகவல் நடுவத்தின் ஊடான சமர்ப்பணமா?**

முக்கியமான அணுகுமுறையாக இந்தக் காலகட்டத்தில், தமிழ் மக்கள் ஒத்த நிலைப்பாடு ஒன்றில் இந்தியாவை பழையவற்றை விலத்தி, குரோதங்களை விட்டு, ஈடுபாட்டுக்காக அழைக்க வேண்டும் என்று உந்துதல் தந்தேன். இது முள்ளிவாய்க்கால் நாள்களிலிருந்தே கண்டும் காணாததுபோல், யார் செய்வது என்று தலைமைகளின் சுயநலன்களினால் தள்ளிப் போகிறது என எல்லோரும் உணர்ந்தார்கள்.

என்னைப்போல் முதிர்ந்ததும், அனுபவ முதிர்ச்சு பெற்றதாகவும் இருந்தது தமிழர் தகவல் நடுவம்தான். பல தமிழ் அமைப்புக்கள் சர்வதேச பரப்பில் நெடுங்காலமாக இயங்கினாலும் தமிழர் தகவல் நடுவம் பக்கச்சார்பற்று இருந்ததினால் அதன் மூலம் இந்த முன்னெடுப்பை மேற்கொள்வது உசிதம் என்று அவர்களுடன் கலந்துரையாடி, ஊக்கங்களும் பெற்றேன்.

அனுபவங்களின் அடிப்படையில் அவர்கள் அழைத்தது வடக்கு கிழக்கின் அரசியல் கட்சிகளைத்தான். அதற்கு போரின் முடிவில் நடுவத்தின் வரதகுமார் ஜெனிவாவில் கூட்டிய எல்லா கட்சிகளினதும் சந்திப்பின் பெறபேறுகளும், அவர்களை ஒருமைப்பாட்டுக்குக் கொண்டுவருவதற்காக பேர்லினில் இயங்கும் பேர்கோவ் மன்றம் நடத்திய முயற்சிகளின் அனுபவங்களையும் தெரிந்து கொண்டதே உதவியது. இந்திய-இலங்கைஒப்பந்தம்ஏற்படுத்தப்பட்ட போது அதன் அடிப்படை வடக்குக் கிழக்கில் வாழ்ந்த இலங்கை தமிழ் மக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மொழி வாரியான தமிழ் பிரதேசம் அதிகாரப் பகிர்வுடன் அமைக்கப்பட வேண்டும் என்பதே. அதற்காக மாகாண முறை பாவிக்கப்பட்டது.

இவைஎல்லாவற்றையும்முறியடிக்க, இந்திரா காந்தி நாள்களிலேயே ஜே.ஆர். சர்வகட்சிக் கூட்டங்கள் கூட்டி, எல்லோரும் சேர்ந்து தீர்மானிக்க வேண்டும் என்று நாடகங்கள் ஆடி, எதுவித சமஷ்டிக்கோ, அதிகாரப் பரவலுக்கோ ஆதரவில்லை, ஒற்றையாட்சிதான் என்று முடிவெடுத்தார். அதன்பின் ராஜீவ் காந்தியின் பேச்சுக்கள் அரச மட்டத்திலும், தமிழர் விடுதலைக்கூட்டணியுடனும்தனித்தனியாக இருந்தன. இந்திய வம்சாவளி மக்கள் சார்பில் தொண்டமான் அறிவு மிக்கவராக இருந்தார். அஷ்ரப், ஹக்கீம் தவிரவும் முஸ்லிம் தரப்புக்கள் இருந்தன. ஆயினும் ஒப்பந்தம் வடக்கு - கிழக்கு ஒன்றிணைந்த தமிழ் மாகாணங்களாக அமைந்தது. முஸ்லிம் தரப்புகளின் ஆதங்கங்களை பாவித்து இணைப்புக்கு ஆப்பு வைக்க ஜே.ஆர். முயன்ற போதும் ராஜீவ் காந்தி காலக்கெடு வைத்து, தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்களுக்கு ”இணைப்பதா இல்லையா என்ற வாக்கெடுப்பு நடக்காது. நீங்கள் ஆதங்கப்படத் தேவையில்லை. ஜே.ஆருக்கு அது தெளிவாகத் தெரியும்” - என்று உத்தரவாதம் அளித்திருந்தார்.

அந்த அனுபவத்தில், ஏற்று கொள்ளப்பட்டு ஆக்கப்பட்டவையை அமுல்படுத்தக் கோரும்போது வட்டத்தை மேலும் பெரிதாக்கி, ஆதரவு தளத்துக்கு அடிபாடு காண வேண்டிய தேவை இருக்கவில்லை. இதனைத்தான் வித்தியாதரனும் வெளிப்படுத்தினார் என்று நினைக்கிறேன்.

அந்த முயற்சியின் ஆரம்பத்திலேயே ரெலோ, புளொட் தனி ஆவர்த்தனம் வாசிக்க முனைந்து, மற்றைய கட்சிகளின் ஈடுபாடு பலமாக இருந்தும், நடுவத்தின் ஆவணம், யாவரும் ஒப்பமிடக் கூடிய ஆவணமாக உருவாகவில்லை. ஆனா லும் அரசியல்வாதிகள் தாங்கள் ஆக்கிய ஒன்றினை ஒருமைப்பாடாகக் கையளிப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் காலங்கள் முக்கியம்.

**631. காலங்கள் ஏன் முக்கியம்?**

ஆரம்பத்தில் இந்தியா ஒப்பந்தம் ஏற்படுத்திய போது இருந்த இந்தியக் கடற்பரப்பின் ஆதிக்க நிலையல்ல இப்போது இருப்பது. திருகோணமலையின் எண்ணைக் குதங்கள் முக்கியமாக அமெரிக்காவுக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்காக தமிழர் அபிலாசைகளைப் பாவித்து இந்தியா அதனை ஒப்பந்தத்தின் மூலம் நிறுத்தியது என்ற குற்றச்சாட்டு விடுதலைப் புலிகள் தரப்பில் முக்கியமாக அதனை ஏற்காததற்குக் காரணமாகச் சொல்லப்பட்டது.

2009 போரில் திருகோணமலை துறைமுகப் பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் போய்விடக்கூடாது என்பதற்காக அமெரிக்கா நேரில் அங்கிருந்து விடுதலைப் புலிகளை அழிக்க உதவியது.

இப்பொழுது, சிறிலங்காவின் கடன் சுமையால் தமிழ் அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகளைக் கணக்கெடுத்தோ, கணக்கெடுத்தும் பாராமுகமாகவோ, அது எண்ணைக் குதங்களுக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்க)

‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி – பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!

கேள்வி பதில் www.uharam.com




**1. கேள்வி:-** ஆறுதிருமுருகன் ஐயாவின் மணி விழாவில் கலந்து கொண்டு நீங்கள் வாழ்த்துரை வழங்கப் போகிறீர்கள் ஏன் அழைப்பிதழில் போட்டிருந்தார்கள். ஆனால் அவ்விழாவில் நீங்கள் கலந்து கொள்ளவில்லை. அவர் வளர்ச்சியில் உங்களுக்குப் பொறாமையா? இல்லை என்றால், அவர் பற்றிய உங்களது எண்ணங்களை இங்காவது பதிவு செய்யலாமே?

**பதில் :-** தான் உருவாக்கி வளர்த்தெடுத்த பிள்ளையின் வளர்ச்சி கண்டு எந்தத் தந்தையாவது பொறாமை கொள்வாரா? தான் நட்டு வளர்த்த மாமரம் காய்த்துக் குலுங்குவது கண்டு எந்த விவசாயியாவது மனம் வாடுவானா? உங்களின் ஒரு கேள்விக்கான பதில் இதுதான்.



திருமுருகன் கேட்டபோது, அந்த நிகழ்வில் கலந்து கொள்வதாக முதலில் சம்மதம் சொல்லிவிட்டேன். பிறகுதான் அந்நிகழ்வு திருவெம்பாவைக் காலத்தில் அமைக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது. கொழும்பில் எங்கள் ஆலயம் அமைக்கப்பட்ட காலத்திலிருந்து திருவெம்பாவை நாள்களில் வீதி பஜனை சென்று வருகிறோம். அதனால் அதைத் தவிர்க்க முடியாமல் போயிற்று.

திருமுருகன் வாழ்த்துப் பெறும் நிலையைத் தாண்டி வாழ்த்து வழங்கும் ஒருவராகிப் பலகாலம் ஆகிவிட்டது. எங்களது பட்டிமண்டபங்கள் மூலம் திருமுருகனை சமூகத்திற்கு அறிமுகம் செய்யும் வாய்ப்பை இறைவன் தந்தான். பேச்சுகளுக்காக நான் தரும் சன்மானத்தைக் குருநாதரின் கட்டளை என்று சொல்லி வாங்க மறுப்பார். அந்தப் பணத்தைச் சேர்த்து ஏதாவது தர்மகாரியம் செய்யலாமே என்று அப்போது அவரை வழிப்படுத்தினேன். அந்தப் பாதையில் இவ்வளவு உயரத்தை அவர் தொடுவாரென நானே எதிர்பார்க்கவில்லை.

கந்தபுராணத்தில் முருகனின் அவதாரத்தைச் சொல்லுகிற பொழுது கச்சியப்பச்சிவாச்சாரியார் ‘கருணை கூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டு ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய’ என்று பாடினார். ஆறுமுகம், பன்னிரண்டு கையுடன் ஒரு முருகனா? இது எப்படிச் சாத்தியம் என்று இளமையில் சந்தேகப்பட்டிருக்கிறேன். அந்தச் சந்தேகத்தை ஆறுதிருமுருகன் தீர்த்து வைத்துவிட்டார்.

நல்லதொரு பேச்சாளர், நல்லதொரு சமூகத் தொண்டர், நல்லதொரு ஆலய நிர்வாகி, நல்லதொரு சமய வழிகாட்டி, நல்லதொரு இலக்கியவாதி, நல்லதொரு செயல்வீரன் என, ஆறுதிருமுருகன் எனும் தன் பெயருக்கேற்ப இவரும் ஒருமுகத்திற்குள் ஆறுமுகங்களை அடக்கி நிற்கிறார். நம் முருகனுக்குப் பன்னிரண்டு கைகள் தான். இவருக்கோ பலநூறு கைகள். அத்தனையும் ஆதரவற்றவர்களுக்காய்ச் செயலாற்றிக் கொண்டிருக்கின்றன.

அனாதரவான பெண்களுக்கான இல்லம், மாற்றுத்திறனாளிகளுக்கான இல்லம், முதியோருக்கான இல்லம், நாய்கள் சரணாலயம், திருவாசக அரண்மனை, அருங்காட்சியகம், ஆலய நிர்வாகம், பல்கலைக்கழக மூதவைப் பணிகள், வைத்திய நிலையம் என்பவற்றோடு, தோட்டம், துரவு என அவற்றிலும் ஓர் கை பார்க்கிறார். வடக்கில் மட்டுமல்லாமல் தமிழர் வாழும் எல்லாப் பிரதேசங்களுக்கும் இவரது தொண்டுக் கரங்கள் நீண்டு கொண்டிருக்கின்றன. இவர் ஆற்றி வரும் பணிகளைச் செய்ய, மற்றவர்களுக்கானால் நூறு கரங்களும் போதாது என்பது நிச்சயம்.

என்னைப் பொறுத்தவரை இன்று திருமுருகன் யாழ்ப்பாணத்தை அடையாளப்படுத்தும் ஒரு கண்ணியக்குறியீடு. எடுத்த காரியங்களையெல்லாம் வெற்றியாக்கும் ஆற்றலை அன்னை துர்க்கையும், தெய்வமாகிவிட்ட ’துர்க்கா துரந்தரி’ யும் அவருக்குக் கொடுத்திருக்கிறார்கள். சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் தொண்டின் தூய்மையை, அவருக்குப் பின்னான தன் உயர் இருப்பால் நியாயப்படுத்தி வருகிறார் திருமுருகன். இவர் நம் மண்ணுக்குக் கிடைத்த பெருஞ்சொத்து என்பதில் எந்த ஐயமுமில்லை.

ஆளுமை, ஆற்றல், செயற்றிறன், சமூக அக்கறை, ஜீவகாருண்யம் என அவர் பெற்றிருக்கும் தகுதிகள் ஓர் இனத்தின் தலைவனுக்குரியவை. இவர் போன்றோர் நம் இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திப் நாடாளுமன்றம் சென்றால் நம் இனம் வலிமை பெறும். எந்தத் தொகுதியில் நிற்க வைத்தாலும் வெற்றி பெறக் கூடிய வீரியர் இவர். நமது தமிழ்க்கட்சிகள் ஏதேனும் ஒன்று இவரைப் பயன்படுத்த முன்வருமா? (தங்களுக்குள் இருக்கும் பதவிச் சண்டை தீர்ந்தால்)

திருமுருகன் நம் சமூகத்திற்குச் செய்யவேண்டிய கடமைகளை நினைக்க முடியாத அளவிற்குச் செய்துவிட்டார். நமது சமூகம் அவருக்கான நன்றியறிதலை அந்த அளவு செய்துவிட்டதா? விடையில்லாமலே கேள்வி நிற்கிறது. தனி ஒருமனிதனாய் நின்று திருமுருகன் செய்திருக்கும் பணிகளை அவருக்குப் பின்னால் கையேற்கப் போகும் இளையோர் கூட்டத்தின் கையில்தான் திருமுருகனின் பணிகளின் நிறைவு தங்கியிருக்கப் போகிறது. ‘சாதனை செய்க பராசக்தி’



**உலகநாதரின் ஒப்பீனியன் * வாழி நலம் சூழ என்றே வாழ்த்துகிறோம். வாழ்க!’**

**2. கேள்வி:-** சமயவாதிகளும் தத்துவக்காரர்களும் ‘மாயை’, ‘மாயை’ என்று ஒன்றைப் பற்றிச் சொல்லி வருகிறார்கள். அந்த ’மாயை’ என்றால் என்ன என்று சற்று விளங்கப்படுத்துவீர்களா?

**பதில் :-** நாரதபுராணத்தில் ஒரு கதை இருக்கிறது. ஒரு கானகத்தின் நடுவில் இருந்த குளக்கரையில் நின்று திருமாலும் நாரதரும் பேசிக் கொண்டிருந்தார்களாம். அப்போது நாரதர் மாயை என்றால் என்ன? என்று நீங்கள் கேட்ட அதே கேள்வியைத் திருமாலிடம் கேட்டாராம். குளத்தில் இறங்கி நீராடி வா! அதுபற்றிச் சொல்கிறேன் என்று திருமால் செல்ல, குளத்தில் மூழ்கிய நாரதர் ஓர் அழகிய பெண்ணாய் வெளிவந்தாராம். அந்நேரம் அங்கு வந்த ஓர் அரசன் அப்பெண்ணைக் கண்டு, விரும்பித் திருமணம் செய்து கொண்டானாம். அவர்களுக்குப் பல குழந்தைகள் பிறந்தனவாம். ஒருநாள் அவ்வரசன் காட்டிற்கு வேட்டையாட அரசியையும் அழைத்துச் சென்றானாம். அங்கிருந்த ஒரு குளத்தில் அரசி குளிக்க ஆசைப்பட அதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்பட்டதாம். அக்குளத்தில் மூழ்கிய அரசி எழும்பிய போது நாரதராய் எழுந்தாராம். வெளியே வந்த நாரதர் தான் நாரதர் என்பதை உணராமல் ’என் கணவன் எங்கே? குழந் தைகள் எங்கே?’ என்று அழுது புலம்பினாராம். அங்கு வந்த திருமால் நாரதரரைத் தொட சுய நினைவுற்ற அவர் இதெல்லாம் என்ன விளையாட்டு என்று திருமாலிடம் கேட்டாராம். திருமால், இதுதான் நீ கேட்ட மாயை என்றாராம். சுருங்கச் சொல்வதானால், பொய்மையை மெய்யாகக் காட்டுவதுதான் மாயை.

**உலகநாதரின் ஒப்பீனியன் * நாரதர் புராணம் படித்துத்தான் நம்ம ஐயா இப்படி இருக்கிறாரோ? ஹி..ஹி..**

**3. கேள்வி:-** என்ன உங்கள் சுமந்திரனது மகனும் ஓர் சிங்களப்பெண்ணைத் திருமணம் செய்துவிட்டாராமே. இப்போது என்ன சொல்லப் போகிறீர்கள்?

**பதில் :-** என்னத்தைச் சொல்ல? மனம் சங்கடப்பட்டது என்னவோ உண்மைதான்! அண்மையில் யாழ் சென்ற போது, சுமந்திரனுடைய நெருங்கிய ஆதரவாளர் ஒருவரிடம், என்ன இப்படியாகிவிட்டதே என வருத்தப்பட்டேன். அவர் சொன்ன பதில் என்னை வாய் அடைக்கச் செய்துவிட்டது. ’இந்தத் திருமணம் உனக்கு வேண்டாம்!’ என்று சுமந்திரன் தடுத்தால், அந்த மகன் ’உங்களது அரசியல் வாழ்வுக்காக எனது தனிவாழ்வை நான் தியாகம் செய்யவேண்டுமா?’ எனக் கேட்டிருப்பான். அந்தக் கேள்விக்குச் சுமந்திரன் என்னபதிலைச் சொல்வது? என்று அவர் என்னிடமே வினாவைத் திருப்பினார். பதில் சொல்ல முடியாமல் சங்கடப்பட்டேன்.

ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். தாய் மண்ணுக்காகப் போராடும் நம்முடைய தமிழ்த் தலைவர்கள் நம் தாய் மண்ணிலேயே குடும்பத்தோடு வாழ்ந்தால் இத்தகைய சங்கடங்கள் ஏற்படாது போல் தெரிகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * ‘மாமியார் உடைச்சா மண்குடம், மருமகள் உடைச்சா பொன்குடமோ?’ வாரிதியாரின் தராசிலும் தடுமாற்றம் போல.**

(11ஆம் பக்கம் பார்க்க)

# இளங்கலை மாணவர் ஆய்வு மாநாடு யாழில் முதன்முதலாக நடக்கவுள்ளது

பல்கலைக்கழகங்களில் பிரதான பணிகளாக கற்பித்தல், ஆராய்ச்சிக் கலாசாரம் போன்றவை முதன்மைப் படுத்தப்படுகின்றதென கலைப்பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட இளங்கலை மாணவர்களுக்கான முதலாவது ஆய்வரங்கு எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

'சமத்துவம், சமநீதி மற்றும் அபிவிருத்திக்கான மானுடவியல் சமூக விஞ்ஞானம்' எனும் தொனிப்பொருளுடன் முன்னெடுக்கப்படும் இந்த ஆய்வரங்கில் கடந்த வருடம் கலைப் பட்டதாரிகளாக வெளியேறிய சுமார் 100 மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப் படவுள்ளன.

இந்த நிகழ்வு தொடர்பில் ஊடகங்களினூடாகப் பொது மக்களுக்கு விளக்கமளிக்கும் ஊடக விவரிப்பு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது. இதன்போது கலைப் பீடாதிபதி பேராசிரியர் ஊடகங்களுக்கு விளக்கமளித்தார். தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவித்தவை வருமாறு –

இலங்கையில் பல்கலைக்கழக மட்டத்தில் கலைத்துறை அதாவது சமூக விஞ்ஞானம் மற்றும் மானுடக் கற்கைகள் கற்பிக்க ஆரம்பிக்கப்பட்டு இந்த வருடத்துடன் நூறு ஆண்டுகள் கடந்துவிட்டன.

இலங்கையில் பல்கலைக்கழக கல்வி தொடர்பாகச் சிந்தித்த இலங்கைக் கல்விமான்கள் தேசிய அடையாளம், பண்பாடு மற்றும் மரபுத் தொடர்ச்சிகள் தொடர்பாக அதிகம் அக்கறை எடுத்திருந்த காரணத்தால் இலங்கையில் விஞ்ஞானம் சார் கற்கைகள் வளர்ச்சியடைந்தமைக்கு மேலாக கலைத்துறை சார்ந்த சமூக விஞ்ஞானம் மற்றும் மனிதப் பண்பியல் கற்கைகள் அதிகம் வளர்ச்சி யுற்றன.

இதன் பின்னணியில் மூத்த இலங்கைப் பல்கலைக்கழகங்களில் கலைப்பீடங்களினதும், அவற்றின் ஆசிரியர்களினதும் செல்வாக்கு மேலோங்கியிருந்தமையை இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றை அறிந்தோர் அறிவர். அத்தகைய பல்கலைக்கழகங்களுள் முதன்மையானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாண வளாகமாக ஆரம்பிக்கப்பட்டு பின்னர் 1979 இல் கல்விசார் சுயதீர்மானம் எடுக்கும் வல்லமை மிக்க முழுமையான தனித்த பல்கலைக்கழகமாக மாற்றம் பெற்றது.

இந்தப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியில் அப்போது மனிதப் பண்பியல் பீடமாகவிருந்த கலைப்பீடம் அதிகம் பங்களிப்புச் செய்திருந்தது.

தற்போது இன்னும் இரண்டு ஆண்டுகளில் ஐம்பதாண்டு நிறைவை நோக்கி நகர்கின்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கருதத்தக்க பல அடைவுகளை அவ்வப்போது எட்டியவண்ணம் நகர்கின்றது.

அந்தவகையில் எதிர்வரும் 10.01.2021 திங்கட்கிழமை நடைபெறும் இளங்கலை மாணவர்களுக்கான முதலாவது ஆய்வரங்கு மிக கவனத்துக்குரியதாக உள்ளது.

பல்கலைக்கழகங்களில் பிரதான பணிகளாக மூன்று விடயங்கள் முதன்மைப்படுத்தப்படுகின்றன. கற்பித்தல், ஆராய்ச்சி, ஶ்ரீ கலாசாரம் ஊடான அறிவுப் பரவலாக்கம் மற்றும் சமூக ஒன்றிணைவு என்பனவே அவையாகும்.

இந்த விடயங்களை எய்தும் அல்லது வழங்கும் முதன்மைத் தளமாகவிருப்பவை பல்கலைக்கழகங்களால் நடத்தப்படும் ஆய்வு மாநாடுகள் ஆகும்.

இவற்றுள் பல்கலைக்கழக மாணவர்களை மட்டும் முழுமையாக ஆய்வாளர்களாகக் கொண்டு நடத்தப்படும் ஆய்வு மாநாடுகள் பல வகைகளில் முக்கியத்துவம் மிக்கன.

இந்தப் பின்னணியில் **1ST UNDERGRADUATE RESEARCH SYMPOSIUM IN ARTS - 2021** எனும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட இளங்கலை மாணவர்களுக்கான முதலாவது ஆய்வரங்கு எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

**Humanities and Social Sciences for Equality, Justice and Development** அதாவது சமத்துவம், சமநீதி மற்றும் அபிவிருத்திக்கான மானுடவியல் சமூக விஞ்ஞானம் எனும் மகுடத்துடன் முன்னெடுக்கப்படும்.

இவ் ஆய்வரங்கில் கடந்த வருடம் கலைப் பட்டதாரிகளாக வெளியேறிய மாணவர்களின் 100 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இலங்கையின் உயர்கல்வி மற்றும் அபிவிருத்தியை துரிதப்படுத்தும் செயற்றிட்டமாக உலக வங்கியின் நிதிப்பங்களிப்பில் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் முன்னெடுக்கப்படும்.

எஹெட் எனும் திட்டம் மூலமாக இவ் ஆய்வரங்குக்கான நிதிப்பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளது. பின்வரும் ஆய்வுத் தடங்களில் ஆய்வரங்கு நடைபெறவுள்ளது.

**1. Law and Order**
**2. Religion and Philosophical Inquiry**
**3. Language, Literature and Art**
**4. State, Governance and Media**
**5. Environment, Economy, Policy Planning and Development**
**6. History, Heritage and Cultural Diversity**
**7. Society, Community Participation and Social work**
**8. Health and Well - being**

கலைப் பீடாதிபதி தலைமையில் நடைபெறவுள்ள இவ் ஆய்வரங்கில் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

மாநாட்டின் சிறப்பு அம்சமாக கைலாசபதி கலையரங்கில் காலை நடைபெறும் அங்குரார்ப்பண நிகழ்வில் திறவுரைகளை **(Keynote Speeches)** பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த் துறையின் முன்னாள் தலைவரும் தகைசார் பேராசிரியருமான வ. மகேஸ்வரன், அமெரிக்காவின் ஸலிபெரி பல்கலை கழக பேராசிரியர்.எஸ்.ஐ. கீதபொன்கலன், கொழும்புப் பகலைக் கழக சட்ட பீடத்தின் ஓய்வுநிலைப் பேராசிரி யர் கலாநிதி. சாந்தி செகராஜசிங்கம் மற்றும் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.ஜயசங்கர் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

மாலை அமர்வில் தனித்துவமாக வடிவமைக்கப்பட்ட பன்னிரு ஆய்வுத் தடங்களில் ஆய்வுக் கட்டுரைகள் முன்வைக்கப்படவுள்ளன. இந்த ஆய்வுத் தடங்களை துறைசார் பேராசிரியர்கள் தலைமை தாங்கவுள்ளனர்.

இன்றைய உலகப் பெருந்தொற்றுக் காலப்பகுதியிலுள்ள பல்வேறு நடைமுறைசார் சவால்களைத் வெற்றிகரமாக முகாமை செய்து எமது பீடம் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை 2021 இல் முன்னெடுத்திருந்தது. அதன் உயர் அடையாளமாக இந்த ஆய்வரங்கு நடைபெறுகின்றது.

வருடம் தோறும் எமது பீடத்தில் சமூக விஞ்ஞானம், மனிதப்பண்பியல், ஆற்றுகைக் கலைகள் மற்றும் காண்பியக் கலைகள் உள்ளிட்ட 26 கற்கை பரப்புகளில் ஏறக்குறைய 400 ஆய்வுகள் இளங்கலை மாணவர்களால் முன்னெடுக்கப்படுகின்றன.

இவற்றுள் பெரும்பாலானவை பெறுமதியான ஆய்வுகளாகவிருந்த போதும் அவை மாநாடுகள் அல்லது தரமான ஆய்விதழ்கள் மூலமாகப் பிரசுரிக்கப்படுவதில்லை. இன்று இந்த ஆய்வரங்கு நூற்றை அண்மித்த ஆய்வுகளின் பிரசுரக்களமாகியுள்ளது.

எமது பீடத்தில் நீண்ட காலமாகவே இத்தகையதோர் ஆய்வரங்கை நடத்தவேண்டும் எனும் எண்ணக் கருவாக்கம் இருந்தபோதும் பல தவிர்க்க முடியாத பின்னணிகளில் இதுவரை அது சாத்தியமாகவில்லை.

ஆனால் இன்று விதையிடப்படும் இந்த ஆய்வரங்கு எதிர்காலத்தில் வருடம் தோறும் நடைபெறவுள்ளதுடன் எமது இறுதியாண்டு மாணவர்கள் தமது ஆய்வு முடிவுகளைச் சமூகப் பரவலாக்கம் செய்யும் வாய்ப்பையும் வழங்கும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் சமூகம் சார்ந்த பொறுப்பை பட்டதாரிகள் மட்டத்தில் நிறைவேற்றும் ஒரு தளமாக இந்த ஆய்வரங்கு அமைகின்றது.

அத்துடன் எமது பட்டதாரிகள் ஆய்வுக் கலாசாரத்துக்குள் தம்மை புகுத்திக்கொள்ளவும் இது துணை செய்யும்.

கலைப்பீடம் கற்றல், கற்பித்தல் மற்றும் ஆய்வுக் கலாசாரத்தில் காண்பித்து வரும் அதியுன்னதமான செயற்பாட்டுக்கு இந்த ஆய்வரங்கு ஒரு முக்கிய தளமாக அமைகின்றது.

ஆர்வமுள்ள எவரும் இந்த ஆய்வரங்கில் பார்வையாளர்களாகக் கலந்துகொள்ள முடியும். குறிப்பாக பாடசாலைகளில் உயர்தரத்தில் கலைப்பிரிவில் கல்வி கற்கும் மாணவர்கள் பங்கு பற்றும் போது பல்கலைக் கழகங்கள் தொடர்பான அவர்களது சிந்தனை இன்னும் ஒரு படி மேலே மேம்படும்.

அத்துடன் பல்கலைக்கழகங்களின் ஆய்வுச் செயற்பாடுகள் தொடர்பாக ஆர்வமுள்ள ஆற்றலாளர்களும் கலந்து கொள்வதை வரவேற்கிள்றோம்.

மாநாட்டின் பின்னர் பகிர்ந்து கொள்ளப்படும் பின்னூட்டல்கள் அடுத்த தடவை மாநாட்டை இன்னும் சிறப்பாக செய்ய வழிசெய்யும். அந்த வகையில் அனைவரையும் இந்த மாநாட்டுக்கு மாநாட்டுத் தலைவர் எனும் அடிப்படையில் வரவேற்கின்றேன்.

இந்த மாநாடு பல்கலைக்கழகத்தின் இணைய மற்றும் யூரியூப் தளங்களிலும், முகநூல் ஊடாகவும் நேரலையாக ஒளிபரப்புச் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# முஸ்லிம்களைக் கொல்லும் மோடியிடம் இலங்கை மக்களுக்கு நீதி கேட்பதா?

## முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகள் எதிர்ப்பு

அரச பயங்கரவாதத்தையும், இனவாதத்தையும் பயன்படுத்தி சிறுபான்மையினரை ஒடுக்கும் இந்தியப் பிரதமரிடமிருந்து ஒடுக்கப்பட்ட தமிழ் பேசும் மக்கள் நீதியைப் பெறக்கூடாது என கிழக்கு முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

'இந்தியாவில் முஸ்லிம்களைக் கொன்று குவிக்கும் இனவாதக் கருத்துகளைக் கொண்ட பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழ் பேசும் மக்கள் கடிதம் அனுப்புவது இலங்கை முஸ்லிம்களை அவமதிக்கும் செயலாகும். – என அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளால் கல்முனையில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் ஏ.ஆர்.பஸ்மீர் தெரிவித்துள்ளார்.

கிழக்கில் வாழும் மக்களைக் கலந்தாலோசிக்காமல் வடக்கு, கிழக்கை இணைக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டால் பாரிய முரண்பாடுகள் உருவாகும் அபாயம் இருப்பதாக பஸ்மீர் கருத்து வெளியிட்டுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், சிறந்த தலைவர் எனப் பின்பற்றுபவர்கள் எந்த ஒரு தீர்மானத்தைத் எடுக்காமல், கட்சியின் உயர்பீடத்தை கூட்டி இது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ள வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கை இணைக்கும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்காக இந்தியப் பிரதமருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ள தமிழ் பேசும் கட்சிகளால் தயாரிக்கப்பட்ட ஆவணத்துக்கு இவ்வாறு முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

'டிசெம்பர் 23 ஆம் திகதி கூடிய அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர் சபையில் அதற்கு ஆதரவான ஆவணத்தில் கையொப்பமிடுவதில்லை எனத் தீர்மானித்தோம்' என கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.எச்.எம்.அப்துல் மனாப் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இந்த கூட்டு ஆவணத்தை ஆய்வு செய்வதற்கு கால அவகாசம் தேவை என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் தமிழ் பேசும் கட்சித் தலைவர்களுக்கு அறிவித்திருந்தார்.

ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபனத்திற்கு காரணமான இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை மீண்டும் செயற்படுத்துவதற்கு அதன் தற்போதைய தலைவர் ரவூப் ஹக்கீம் தயாரித்துள்ள ஆவணங்களின் உள்ளடக்கம் தொடர்பாகக் கிழக்கு மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என கல்முனை மாநகர சபை உறுப்பினர் மனாப் வலியுறுத்தினார்.

இரகசியமாகத் தயாரிக்கப்படும் ஆவணத்தில் பொதுமக்களுக்கு தெரியப்படுத்தாமல் கையொப்பமிட்டால், கிழக்கில் முஸ்லிம்கள், தமிழர்கள், சிங்களவர்கள் ஒன்றிணைந்து போராட்டம் நடத்துவோம் என அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர் எஸ்.எம். சபீஸ் எச்சரிக்கையும் விடுத்திருந்தார்.

# 300 ரூபாவாகவும் எகிறலாம் அரிசி?

தற்போது நிலவும் உர நெருக்கடி காரணமாக எதிர்காலத்தில் ஒரு கிலோ அரிசியின் விலை 300 ரூபாவாக அதிகரிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

பொலன்னறுவையில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலைகளின் உரிமையாளர்கள், உரப்பிரச்சினை காரணமாக இந்த நிலைமை ஏற்படக்கூடும் எனச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்கிடையில், உரிய நேரத்தில் இரசாயன உரங்கள் கிடைக்காததால் பயிர்கள் மஞ்சள் நிறமாக மாறி வருகின்றன என விவசாயிகள் தொடர்ந்து குற்றம் சுமத்தி வருகின்றனர்.

# இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்து சண்டிலிப்பாயில் போராட்டம்!





இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்து யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் முன்பாக வீதியை மறித்து போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மாவட்ட கடற்தொழிலாளர்கள் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனமும், மாதகல் பிரதேச கடற்தொழிலாளர்களும் இணைந்து நேற்று (வெள்ளிக்கிழமை) காலை குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

2 ஆயிரத்து 500 இந்திய இழுவைமடி தொழிலை நிறுத்தும் வரை போராடுவோம், இந்திய அரசு வடக்கு மீனவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கக் கோருகிறோம். எமது கடல் வளத்தையும் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்க இலங்கை அரசை வலியுறுத்துவோம் போன்ற கோஷங்களை முன் வைத்தே போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வீதியை மறித்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டமையால், அவ்வீதி வழியான போக்குவரத்துக்குத் தடை ஏற்பட்டு இருந்த நிலையில், பொலிஸார் போராட்டகாரர்களை வீதியோரமாக நின்று போராடுமாறு பணித்த போது, 'கடலில் அயல்நாட்டினவர்களின் அத்துமீறகளை தடுக்க முடியவில்லை, சொந்தநாட்டு மக்களை அடக்க முயல்கிறீர்களா ?', 'எங்களுடன் கடலுக்கு வாருங்கள் ,அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களை காண்பிக்கிறோம். முடிந்தால் அவர்களைக் கைது செய்யுங்கள் ' என கோரி பொலிஸாரின் பணிப்பை புறம் தள்ளி வீதியில் அமர்ந்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

சுமார் ஒரு மணி நேரம் குறித்த போராட்டத்தை முன்னெடுத்த பின்னர், உதவி பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்த பின்னர், தமது போராட்டததை முடிவுறுத்தினர்.

# க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு இனி கொரிய மொழியும் பாடமாக!

## அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தகவல்

2023 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு கொரிய மொழி பாடமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொரிய குடியரசின் பிரதிப் பிரதமர் மற்றும் கல்வி அமைச்சருக்கு இடையில் சியோல் நகரில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தென் கொரியாவில் பணிபுரியும் 22 ஆயிரம் இலங்கையர்களைப் பற்றிக் குறிப்பிட்ட வெளிவிவகார அமைச்சர், இலங்கையில் கொரிய மொழி புலமையை இலக்காகக் கொண்ட கற்றல் கற்கைநெறிகளின் பிரபல்யம் தொடர்பாகக் குறிப்பிட்டுள்ளார்.



இதேவேளை, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸுக்குப் பதிலளித்த கொரியாவின் பிரதிப் பிரதமர் யூ இயூன்ஹை, இலங்கையில் தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறையின் முன்முயற்சிகளுக்கு விரிவான ஆதரவை வழங்குவதில் கொரியக் குடியரசு அக்கறை கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

# அறிமுக நிகழ்வு

கல்வியியலில் பட்டப்பின் டிப்ளோமா பாடநெறி (முழுநேரம்) மற்றும் பகுதிநேரம் ஆகியவற்றிற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தினால் தெரிவுசெய்யப்பட்டமாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு முறையே 18.01.2022 மற்றும் 22.01.2022 ஆகிய தினங்களில் கலைப்பீடத்தில் நடைபெறவுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட மாணவர் பட்டியல் கலைப்பீட இணையத் தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மாணவர்கள் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக அனுமதிகள் கிளையினை தொடர்புகொண்டு கற்கை நெறிக்கான பதிவுகளை அறிமுக நிகழ்வுக்கு முன்னராக மேற்கொள்ளுமாறும் (தொலைபேசி இல.0212226714) மேலதிக விபரங்களை கலைப் பீடபீடாதிபதி அலுவலகத்துடன் (தொலைபேசி இல.0212223091) தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாமெனவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் திரு.வி.காண்டீபன் அறியத்தந்துள்ளார்.

# பிறக்கும் குழந்தைகளின் பாதத்தில் வளைவுகள் இருந்தால் குடும்ப நல வைத்தியரிடம் காட்டவும்!

## என்புமுறிவு வைத்திய நிபுணர் கோபிசங்கர் தெரிவிப்பு

(கலையமுதன்)
யாழ்ப்பாணம்,ஜன. 08

வளைந்த பாத குறைபாடுடன் பிறக்கும் பொழுது குழந்தைகளின் பாதத்தில் வளைவுகள் காணப்படும். சிறிதளவு சந்தேகம் இருந்தால் உடனடியாக குடும்ப நல வைத்தியரிடம் காட்டி எம்மை அணுகலாமென என்புமுறிவு வைத்திய நிபுணர் கோபிசங்கர் தெரிவித்தார்.

வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வளைந்த பாதங்களுடைய குழந்தைகளை முன்கூட்டியே கண்டறிவதற்கான விழிப்புணர்வு கருத்தரங்குக்கு பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

வளைபாதம் என்பது பெண்களை விட ஆண்களையே பாதிக்கின்றது. இவ்வாறான நோயுள்ளவர்களில் 50 - 60 வீதமானவர்கள் குதிக்காலில் வளை பாதத்தைக் கொண்டவர்கள்.

இதற்கான சிகிச்சை முறைகள் இருந்தாலும் கடந்த இரண்டு மாதங்களாக யாழ்ப்பாணத்தில் சர்வதேச நிறுவனங்களின் உதவியுடன் சிறந்த சிகிச்சை முறைகளை வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

இந்த சிகிச்சை முறை இலங்கையில் சில வைத்தியசாலைகளிலேயே காணப்படுவதுடன் அவர்களுடன் கைகோர்த்து இந்த சிகிச்சைகளை வழங்கிக் கொண்டிருக்கின்றோம்.

இதில் முக்கியமாக குழந்தைகளும் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வும் இல்லாததால் சரியான சிகிச்சை வழங்க முடியாத நிலைமை காணப்படுகிறது.

உடனடியாக அந்தக் குழந்தைகளை இனங்கண்டு சிகிச்சைகளை ஆரம்பிக்கும் இடத்தில் நூறு வீதம் குணப்படுத்தக்கூடிய நிலைமை உள்ளது.



இதற்கான அனைத்து சிகிச்சைகளும் இலவசமாக யாழ். போதனா வைத்தியசாலையின் எலும்பு முறிவு பிரிவில் வழங்கப்படுகின்றது. சிகிச்சை வழங்கும் அவர்களுக்கும் நாங்கள் பயிற்சி பட்டறைகளை நடத்துகின்றோம்.

இவ்வாறான குழந்தைகளைக் கண்டறிந்து வாரத்துக்கு ஒருமுறை சிறிய சத்திரசிகிச்சை செய்து மீண்டும் அவை வராமல் தடுப்பதோடு நூறுவீதம் குணமடையக் கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு.

சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்களுக்கும் இதைப்பற்றி விழிப்புணர்வு அளிக்கப்பட்டு சர்வதேச தரத்திலான வைத்திய முறைகளை வழங்குவதற்குத் தீர்மானித்திருக்கிறோம்.

இவ்வாறான நோய்நிலையில் பிறக்கும் பொழுது குழந்தைகளின் பாதத்தில் வளைவுகள் காணப்படும். சிறிதளவு சந்தேகம் இருந்தால் உடனடியாக குடும்ப நல வைத்தியரிடம் காட்டி எம்மை அணுகலாம் அல்லது நேரடியாக எம்மை அணுகலாம். - என்றார்.

# பொலிஸாரின் மனிதநேயம்! பலரும் பாராட்டு தெரிவிப்பு



பொலிஸார் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் கூறப்பட்டு வரும் இந்தக் காலப்பகுதியில் இரண்டு பொலிஸ் அதிகாரிகளின் மனிதாபிமானத்தை விளக்கும் வீடியோ ஒன்று தற்போது சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

பொலன்னறுவை பெதிவெள சந்திக்கு அருகில் ஓட்டோ ஒன்று வேகமாகச் சென்றதை இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் அவதானித்துள்ளனர்.

குறித்த ஓட்டோவில் நோய்வாய்ப்பட்ட குழந்தையொன்று பொலன்னறுவை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுக்கொண்டிருந்தது.

அதை அவதானித்த இரண்டு பொலிஸ் அதிகாரிகளும் உடனடியாக செயற்பட்டனர்.

அதன்படி, ஓட்டோவுக்கு முன்னால் விரைந்து சென்ற பொலிஸ் அதிகாரிகள் ஓட்டோவை வேகமாக வைத்தியசாலை செல்வதற்காக வீதியில் வாகனங்களை விலக்கி வழி விட்டுச் சென்றனர்.

இந்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலன்னறுவை போக்குவரத்து பொலிஸ் பிரிவை சேர்ந்த இரண்டு அதிகாரிகளே இந்த மனிதாபிமான செயலை செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## பஸிலின் டில்லி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செவ்வாய்க்கிழமை இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவிருந்தார்.

மல்வானையில் உள்ள வீடு மற்றும் காணி தொடர்பான வழக்கு நேற்று கம்பஹா மேல் நீதிமன்றத்தில் விசாரணக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதிமன்றத்தில் ஆஜராக வருகை தந்திருந்த நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் ஊடகவியலாளர்கள் இந்திய பயணம் குறித்து கேள்வி எழுப்பினர்.

இந்தியாவில் கொரோனாத் தொற்று அதிகரித்திருப்பதால், தற்போது அங்கு செல்ல முடியாது எனப் பஸில் ராஜபக்ஷ பதில் வழங்கினார்.

---

## எளிமைமிகு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாப்பாண முதலியாரின் நற்செயற்பாடுகளை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ள இந்த நூலின் வெளியீட்டுக்கு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தலைமை தாங்கினார்.

நிகழ்வில் யாழ். மாவட்ட இந்து அமைப்புக்களின் ஒன்றியச் செயலாளர் இ. இரத்தினசிங்கம் வரவேற்புரையையும், நல்லை சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள், கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை பிரதி அதிபர் செந்தமிழ் சொல்லருவி ச. லலீசன் ஆகியோர் கருத்துரைகளையும், யாழ். மாவட்ட இந்து அமைப்புகளின் ஒன்றிய நிர்வாக சபை உறுப்பினர் ச. லோகசிங்கம் நன்றியுரையும் ஆற்றினர்.

நூலின் முதல் பிரதியை நல்லூர் ஆலய தொண்டர் கண்ணன் நல்லை ஆதீன முதல்வரிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கு கைநூல் இலவசமாக வழங்கப்பட்டது.

---

## யாழில் பல்வேறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதி கொடிகாமம் பொலிஸ் பிரதேசத்துக்குட்பட்ட பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் மோட்டார் சைக்கிள் உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதேபோல் கடந்த வருடம் நவம்பர் மாதம் 19ஆம் திகதி உடுவில் அம்பலவாணர் வீதிப் பகுதியிலுள்ள வீடு ஒன்றுக்குள் நுழைந்து அங்குள்ள வீட்டின் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டது. சந்தேகநபர்கள் குறித்த திருடப்பட்ட மோட்டார் சைக்கிளில் வந்திருந்தமை விசாரணைகளில் தெரியவந்திருந்தது.

அதேபோல் கடந்த வருடம் அம்பலவாணர் வீதி, சுன்னாகம் பொலிஸ் பிரதேசத்துக்குட்பட்ட உடுவில் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவத்துடன் குறித்த சந்தேகநபர்கள் தொடர்புபட்டிருந்தமை தெரியவந்திருந்தது.

இந்நிலையில், கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் நால்வரும் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

---

## எவர் என்ன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் ‘சுபீட்சத்தின் நோக்கு’ கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டவாறு ஆயிரம் பாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாக மாற்றும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய மொனராகலை - சியம்பலாண்டுவ மஹா வித்தியாலயம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று முற்பகல் தேசிய பாடசாலையாக மாணவர்களிடம் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஜனாதிபதி உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாடசாலை அல்லது பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும்போது, சகல திறமைகளுடன் கூடிய பிள்ளைகளாக அவர்கள் வெளியேற வேண்டும். அதற்கேற்றவாறான கல்வி முறைமை, ‘சுபீட்சத்தின் நோக்கு’ கல்வி மறுசீரமைப்பின் மூலம் நிறைவேற்றப்படும்.

ஒவ்வொரு குழந்தைக்கும் தகவல் தொழில்நுட்ப அறிவை வழங்கி, தொழில்நுட்ப ரீதியாக முன்னேறிய தொழிற்படையாக முன்னோக்கிச் செல்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எதிர்வரும் காலங்களில் முன்னெடுக்கப்படும்.

நாட்டின் எதிர்கால முன்னேற்றத்துக்காக, அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து, ஒரு குழுவாகச் செயற்பட வேண்டும்.

ஏற்படும் பின்னடைவுகளை, ஒரு குழுவாக எதிர்கொள்வது கூட்டுப் பொறுப்பாகும். அவ்வாறு செய்யாமல், குறைகளை மட்டும் விமர்சிப்பது சம்பந்தப்பட்டவரின் திறமையின்மையே ஆகும்.

கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக இழந்த இரண்டு வருடங்களைப் பற்றி சிந்திக்காமல், உறுதியளிக்கப்பட்ட பொறுப்புகளை அடுத்த மூன்று வருடங்களுக்குள் நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படவுள்ளோம்.

ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியை எதிர்பார்க்கின்றார்கள். எவ்வாறாயினும், அரசமைப்பின் மூலம் வழங்கக்கூடிய 30 அமைச்சுப் பதவிகளுக்கு மேலதிகமாக எந்தவொரு அமைச்சுப் பதவியையும் வழங்கி மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை மீறப்போவதில்லை.

மக்களுக்காக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு உதவுவது எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கடமையாகும்.

தீர்மானங்களை எடுக்கும்போது அதிகாரிகள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை மட்டும் பாருங்கள். அவ்வாறில்லாமல் சுற்றறிக்கைகளின் மூலம் எவ்வாறு வேலைசெய்யாதிருப்பதெனப் பார்க்க வேண்டாம்.

எதிர்வரும் மூன்று வருடங்களுக்கு முழு ஆதரவை அனைத்து அரச ஊழியர்களும் வழங்க வேண்டும்.

மக்களுக்கான வலுவான அரச சேவையை உருவாக்குவதற்காக, எதிர்காலத்தில் அரச நிறுவனங்களுக்கு நேரில் சென்று பார்வையிடவுள்ளேன்.

‘கிராமத்துடன் கலந்துரையாடல்’ நிகழ்ச்சித்திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு மக்களின் அபிலாஷைகள் விரைவில் நிறைவேற்றப்படும் - என்றார்.

---

## பேச்சு சுதந்திரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது, ‘வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவுக்கு 14 மெய்ப்பாதுகாவலர்களும் 6 சாரதிகளும் உள்ளனர். இவர்களுக்காகப் பல இலட்சம் ரூபாக்கள் செலவிடப்படுகின்றன. அத்துடன் ஆளுநர் தனது எரிபொருள் மற்றும் ரீசேட் கொள்வனவுக்காகப் பல இலட்சம் ரூபாவை மக்களின் வரிப்பணத்தில் செலவிடுகின்றார்’ என்று தெரிவித்திருந்தார்.

அந்நிலையில், அதற்குப் பதில் வழங்கும் வகையில் வடக்கு மாகாண ஆளுநர் செய்திக் குறிப்பொன்றை நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

குறித்த செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஆளுநரின் ஊழியர்கள், மாகாண நியமன ஊழியர்கள் என்பதை நினைவில்கொள்ள வேண்டும். ஆளுநர் நீதியான சமுதாயத்தை நம்புகின்றார். அதற்காக நேர்மையாகப் பணியாற்றுகின்றார்.

இங்குள்ள சிலர் மாற்றுக் கருத்துக்களைக் கொண்டுள்ளனர். அவர்களுக்குப் பேச்சு சுதந்திரம் போன்ற அடிப்படைச் சுதந்திரங்கள் உண்டு. அவற்றை அவர்கள் தவறாகப் பயன்படுத்தக் கூடாது. அந்தச் சுதந்திரங்களைப் பயன்படுத்தி தேசத் துரோக செயல்களில் ஈடுபட முடியாது - என்றுள்ளது.

# கிளிநொச்சி மின்தகன மயானத்துக்கு அடிக்கல்



கிளிநொச்சியில் அமையவுள்ள மின்தகன மயானத்துக்கு நேற்று அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

குறித்த மின்தகன மயானமானது கரைச்சிபிரதேசசபையின்வழிகாட்டலில் மயான அபிவிருத்திக்குழுவின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மக்கள் அமைப்பு புலம்பெயர்ந்துள்ள மக்கள் கிளிநொச்சி வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்களின் நிதிப் பங்களிப்பில் 25 மில்லியன் ரூபா செலவில் அமையவுள்ளது.

மயான அபிவிருத்திக்குழுவின் தலைவர் நவரட்ணராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன், சின்மயா மிசன் சுவாமிகள், அருட்தந்தை, கிளிநொச்சி மக்கள் அமைப்பின் பிரதிநிதிகள், நிதி உதவி செய்த கொடையாளர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## கிளிநொச்சியில் உயிரிழந்த பெண்ணுக்குக் கொரோனா

கிளிநொச்சியில் உயிரிழந்த பெண் ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் குறித்த பெண்ணுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் 32 வயதுடைய கே.கௌரி என மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## இனப் படுகொலை...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்த ஒப்பந்தத்தில் தமிழர் அபிலாசைகளோ, முதலாம் ஒப்பந்தம் பற்றிய கரிசனைகள் அடக்கப்பட்டனவா என்பது தெரியவில்லை.

அடிக்கடி பணத்துக்கு வரும் மகனைச் சமாளிப்பது போல இந்தியத் தாய் மடியில் இருந்து காசு எடுத்து கொடுத்து ஸ்ரீலங்காவைச் சமாளிக்கலாம் என்ற எண்ணப்பாட்டில், அதன் போக்குகளில் ‘ஆகட்டும் பார்க்கலாம்’ என்ற வார்த்தைகள் தரப்படலாம்.

நிலைமையைப் புரிந்து கொண்டிருந்தால் தலைமைகள் இப்படியான சமர்ப்பணங்களை, இந்தியாவிற்குப் போர் முடிந்த காலங்களில் முள்ளிவாய்க்காலில் ஏற்பட்ட யதார்த்த நிலைகளிலிருந்து அணுகுமுறையாகக் கொடுத்திருக்க வேண்டும். தமிழ் மக்களின் முக்கிய பரப்புக்கள் இந்தியாவை ஓரம்கட்டி, சர்வதேசத்தின் ஆதரவு பெற வேண்டுமென இயங்கியவை. அவர்கள் நல்லாட்சிக்கு வழிவகுத்தது, அவை இப்பொழுது உள்ள ஆட்சிக்குப் பாதை தந்தது. எல்லாமே கால விரயங்கள்தான். ‘காற்றுள்ள தூற்றிக்கொள்’ என்ற பழமொழி உண்டு. அதேசமயம் இது ஒப்புக்கான ஒருமைப்பாடா அல்லது உள்ளார்ந்த உணர்வுடைய ஒருமைப்பாடா என்ற கேள்விகளும் உண்டு.

அவற்றின் தோற்றமாகவே, இப்போது நடந்த கலந்துரையாடல்கள், தமிழ்தேசிய பரப்பில் உள்ள கட்சிகளின் ஒன்றுபட்ட வெளிப்பாடாக இருந்தாலும், இவ்விடயங்களை ஒட்டித் தமிழ் பேசும் தரப்புக்கள் ஒரு மேசையிலிருந்து கலந்துரையாடும் பொறிமுறை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் தோன்றுகின்றன.

ஜனாதிபதி கோட்டாபய இந்தியாவுக்கு விருந்தினராக போன நாள்களிலேயே இந்தியா தமிழ் மக்களுக்காக பரிந்துரைகள் செய்வதை விட வேண்டும், முள்ளிவாய்க்காலின் பின் அது முழுமையாக உள்நாட்டு விடயம் எனப் பேசப்பட்டது. அவற்றை உள்நாட்டு விடயமாக அல்லது ஒரு அதிகாரத்தின் கீழ் விடுவீர்களா?, எண்ணை குதங்களின் குத்தகைப் பேரம் அல்லது கடன் சுமை தீர்க்க உதவுதல் என்பவற்றில் எது முன் நிற்கின்றது என்பதை வெளிப்படையாகவில்லை. ஜனாதிபதிக்கும் பாரிய பொறுப்பு இந்தக் கடன் சுமை காலங்களில் உண்டு. ஆகவே அவர் மேலும், சிங்கள - பௌத்த வாதிகளை திருப்திப்படுத்த தான் தீர்மானங்களை எடுப்பேன் என விருது வழங்கப்பட்ட வைபவத்தில் ஆணித்தரமாக உரையாற்றியுள்ளார். அந்தச் சிந்தனைப் போக்கில், அதனை நடைமுறைப்படுத்தும் திராணியும் பலமும் தனக்கு இருக்கின்றது எனத் திமிராகப் பேசும் ஒரு பக்கத்தோடு உள்ளக சுயநிர்ணய உரிமைகளை பற்றி பேசுவோம் என்று தமிழ் மக்கள் கனவு கண்டால் அது மற்றவர்களின் பிழைகள் அல்ல. அவை பற்றி மேலும் பார்க்கலாம்.

(வளரும்....)

---

## கிணற்றிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தந்தையான 34 வயதுடைய ரமேஸ் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் வவுனியா தெற்கு தமிழ் பிரதே சபையில் சிற்றூழியராகக் கடமையாற்றியுள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மரணச்சடங்குக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய இவர், இரவு 8 மணியளவில் குளிர்த்துவிட்டு வருவதாக வீட்டிலுள்ள வயல் கிணற்றுக்குச் சென்றுள்ளார்.

பல மணி நேரமாகியும் அவர் அங்கிருந்து திரும்பி வராததால் தேடிப் பார்த்தபோது அவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

அயலவர்களின் உதவியுடன் கிணற்றில் தேடியபோதும் அவர் கிடைக்கவில்லை.

இதையடுத்து தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தின் உதவியுடன் கிணற்றிலிருந்த நீர் இறைக்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் குறித்த குடும்பஸ்தரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

உயிரிழந்தவருக்கு, வலிப்பு ஏற்படும் என்றும், குளிர்த்துக்கொண்டிருந்தபோது வலிப்பு ஏற்பட்டு கிணற்றுக்குள் தவறி வீழ்ந்திருக்கலாம் என்றும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் நெளுக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (100)

---

## தூக்கில் தொங்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுவதியை மீட்டு வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று சேர்க்கப்பட்டபோதும் அவர் உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, மணிபுரம் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய தங்கவேல் திவ்யா என்ற - ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் - யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யுவதியின் மரணம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (100)

# தென்மராட்சி இலக்கிய அணியின் பாரதி விழா இன்று நிகழ்நிலையாக!

தென்மராட்சி இலக்கிய அணி நடத்தும் பாரதி விழா இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நிகழ்நிலையாக நடைபெறவுள்ளது.

ஆண்டுதோறும் கம்பன் விழா, வள்ளுவர் விழா, பாரதி விழா எனும் முப்பெரும் விழாக்களை நடத்திவருகின்ற தென்மராட்சி இலக்கிய அணி இம்முறை பாரதி விழாவை நடத்த இருக்கின்றது. வைத்திய கலாநிதி சு.சி. அருளானந்தம் தம்பதியினரின் மங்கலவிளக்கேற்றலுடன் ஆரம்பமாகவுள்ள இவ் விழாவில் கடவுள் வாழ்த்தை இசைப்பேரறிஞர் பஞ்சாபிஷேகனின் பேரப்புதல்வர்களான இசை இளவல்கள் வி.சித்தார்த்தன், வி. பிரதித்தன் சகோதரர்கள் இசைக்கவுள்ளனர். தொடர்ந்து நிகழ்விற்கான எழிலுரையினை அதிவண.கலாநிதி எஸ். ஜெபநேசன் அடிகளார் 'நல்ல விதைகளைத் தூவிச் சென்ற நமது பாரதி' என்ற பொருளில் ஆற்றவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து விழாவின் சிறப்பரங்காக விவாத அரங்கு மலரவுள்ளது. வையத் தலைமை கொள் தமிழ்ப் பேரறிஞர், இலக்கியப் பிதாமகர், கம்பவாரிதி இ.ஜெயராஜ் இவ் விவாத அரங்கின் நடுவராக அமர இருக்கிறார்.

"பாரதி பெரிதும் அவாவியது..

தேச விடுதலையையே ! என்று ஆசிரியர் திருநந்தகுமாரும்

சமூக விடுதலையையே! என்று பேராசிரியர் தி.வேல்நம்பியும் –

பெண் விடுதலையையே! என்று ஆசிரியர் ச.மார்க்கண்டுவும் –

ஆன்ம விடுதலையையே! என்று பேராசிரியர் ஸ்ரீ.பிரசாந்தனும் – விவாதிக்கவுள்ளனர்.

நிகழ்நிலையாக அமையவுள்ள இந்நிகழ்வை 'தென்மராட்சி இலக்கிய அணி' என்ற யூ டியூப் சனலினூடாகவும் 'தென்மராட்சி இலக்கிய அணி' என்ற முகநூல் பக்கத்தினூடாகவும் கண்டுகளிக்கலாம். இலக்கிய ரசிகர்களின் வரவுதான் விழாவின் வெற்றியாக அமையும் என்பதால் குறித்த நேரத்தில் சுற்றம் சூழக்கூடி இணைய வெளியில் இணையப் பணிகிறோம் என தென்மராட்சி இலக்கிய அணியினர் தெரிவித்துள்ளனர்.

# பாட்டும் நானே?

**4. கேள்வி:-** இராமன் உலகத்தாருக்காகத் தன் மனைவியைத் தீக்குளிக்கச் செய்தது சரியாகுமா? கணவன், மனைவி இருவருக்கிடையிலான உறவை உலகத்தாரின் முன் நிரூபிக்க வேண்டிய தேவை என்ன?

**பதில் :-** மேலோட்டமாகப் பார்த்தால் உங்கள் கேள்வி சரி என்றுதான் தோன்றும். ஆனால் 'காசில் கொற்றத்து இராமன்' என கம்பனால் புகழப்பட்ட இராமனும் பிழை செய்வானோ என்றும் சிந்திக்கவேண்டியிருக்கிறது. அதனால் இக் கேள்விக்கான விடை காண்பதற்கு முன் ஆழச் சிந்திக்கவேண்டியது அவசியமாகிறது.

கணவன், மனைவி தொடர்பு என்பது இருவருக்கிடையிலான உறவுதான். அவ் உறவின் தூய்மையை மற்றவர்களுக்கு நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை என்பதும் உண்மைதான். ஆனால் இவ் உண்மை சாதாரண பொதுமக்களுக்கு மட்டுமே உரியது. தலைவர்களுக்கு உரியதன்று! ஏனென்று சற்று விரிவாய்ச் சொல்கிறேன்.

ஒரு தலைவன் நாட்டு மக்களுக்காகப் பாடுபடுகிற அதேவேளை, நாட்டு மக்களிடமிருந்து பல சலுகைகளையும் பெற்றுக் கொள்கிறான். முக்கியமாக அவனது அரசியல் வெற்றி என்பது, மக்கள் தரும் வரிப்பணத்தில்த்தான் தங்கியிருக்கிறது. அந்த வரிப்பணத்தின் ஒரு பகுதியைப் பெருமைமிக்க, தன் தனிவாழ்வுக்காகவும் அரசன் பயன்படுத்தலாம் என்று அறநூல்கள் சொல்கின்றன.

அதனால்த்தான் அன்று காவலாளிகள், சேவகர்கள், அரண்மனை, சிம்மாசனம், குதிரை, யானை, தேர், என்றெல்லாம் அப் பணத்தைப் பயன்படுத்தி அரசர்கள் வாழ அனுமதிக்கப்பட்டார்கள். மக்கள் பணத்தில் இத்தகைய ஆடம்பரச் செலவுகளைத் தலைவன் செய்யலாமா என்று கேட்பீர்கள். ஓர் இனத்தின் குறியீடாய் நிற்கும் தலைவனின் வாழ்வுச் செழிப்பு அந்த இனத்தின் செழிப்பாய்க் கருதப்படும் என்பதற்காகவே தலைவர்களுக்கு இச்சலுகை வழங்கப்பட்டது.

அன்றென்ன இன்றும் கூட தலைவர்களுக்கு இத்தகைய சலுகைகள் எல்லாம் மக்களின் வரிப்பணத்திலிருந்து வழங்கப்படுகின்றன. கொமியூனிசம் பேசும் நாட்டுத் தலைவர்களும் கூட இச்சலுகைகளைப் பெற்றுத்தான் வாழ்கிறார்கள். வாகனம் என்றும் வீடென்றும் பணமென்றும் வெளிநாட்டுப் பயணங்களென்றும் தலைவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் எல்லாம் கூட அந்த உரிமையால் வந்தவைதான்.

இதிலிருந்துதான் உங்கள் கேள்விக்கான விடை தொடங்குகிறது. மக்கள் பணத்தில் சலுகை பெற்று வாழும் தலைவன் தன் தூய்மையை மக்களுக்கு நிரூபிக்கவேண்டும் என்பது நியதி. அப்படி மக்கள் பணத்தால் கிடைக்கும் வசதிகளை தலைவர்கள் மட்டுமன்றி, தலை வர்களின் குடும்பத்தாரும் அனுபவிக்கவே செய்கிறார்கள். அதனால் அக்குடும்பத்தாரும் மக்களின் முன் தமது தூய்மையை நிரூபிக்க வேண்டியது கட்டாயமாகிறது.

சலுகைகளை அனுபவிக்கும் போது தானும் குடும்பமும் ஒன்றென்றும், குடும்பத்தாரால் பிரச்சினைகள் உண்டாகும்போது நான் வேறு குடும்பம் வேறு என்றும் ஒரு தலைவன் சொல்வது எந்தவிதத்திலும் நியாயமாகாது. அப்படிச் சொல்லவேண்டுமானால் தலைவனின் குடும்பத்தார், மக்கள் பணத்தால் வந்த சலுகைகள் எதனையும் அனுபவித்து இருக்கக்கூடாது.

உலகத்தார் தம் தலைவனைப் பின்பற்றியே நடக்க முனைவார்கள். அத் தலைவனின் தனிவாழ்விலோ குடும்ப வாழ்விலோ தவறு நிகழ்ந்தால், அது உலகத்தாருக்கான முன்னுதாரணமாகிவிடும். அதனால்தான் இராமன் தனக்கும் சீதைக்குமான தனி உறவை உலகத்தாரின் முன் நிரூபிக்கவேண்டி வந்தது. தலைவர்கள் இப்படி வாழ்ந்தால் அத்தலைவர்களைக் கொண்ட இனம் உயரும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * உலகநாதருக்கு ஒரு 'டவுட்டுங்கோ'. முதல் கேள்விக்கும் இந்தப் பதிலுக்கும் இடையில ஏதாவது 'கனெக்ஷன்' இருக்குதாங்கோ?**

# ஆலோசனைக் கலந்துரையாடல்

காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது தொடர்பான கலைஞர்கள் மற்றும் அறிஞர்கள் கலந்து கொள்ளும் கலந்துரையாடல் நாளை பிற்பகல் 2 மணிக்கு, நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் கிழவன்காடு கலாமன்றத் தலைவர் ந. சோதிநாதன் தலைமையில் இடம்பெறும்.


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## VACANCY

Applications are hereby invited up to31stJanuary, 2022from suitably qualified persons for the following post.

**1. POST OF LIVESTOCK ASSISTANT, GRADE III**
**Qualifications**:
i. (a) G.C.E. (Ordinary Level) Examination in 6 subjects at not more than 2 sittings.
AND
(b) Successful completion of one year's practical training course in Animal Husbandry conducted by the Department of Agriculture or equivalent.

**Age:** Not more than 40 years.
Salary Scale : U-MT1 (III) - Rs.31, 625-7x300; 10x355-37,275.p.m.
Selection By : Interview

**Note: *Age limit is not applicable for applicants in the Government departments/ State Corporation and statuary bodies.***

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident fund and Universities Pension Scheme in the University System.
3. Gratuity payment.
4. Employment trust fund.
5. Free Medical Care.

Applications should be on **specified form** issued by the University. Application Form, University specified pay-in-voucher and other particulars for the above posts can be downloaded only from the University website - **www.jfn.ac.lk.**

Applicants should deposit the Application Fee of Rs.100.00 at any branch of the People's Bank in favour of **University of Jaffna Collection Account Number: 970000090000387.** A copy of the Bank Deposit Slip should be attached with the application as the proof of the payment of Application Fee.

**Sample Deposit Slip is given below:**




**Copies of certificates in support of the Educational/Professional qualifications and experience as at the closing date of the applications must be attached to the applications.**

The envelope containing the duly filled application form must bear Title of the Post as Livestock Assistant, Grade IIIon its top left hand corner and either hand delivered or sent under registered post to **reach the Office of the Deputy Registrar/ Non-Academic Establishments, University of Jaffna, P.O. Box 57, Thirunelvely, Jaffna on or before 31.01.2022.**

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date and without the copies of certificates will be rejected without intimation.

**REGISTRAR**
UNIVERSITY OF JAFFNA.
07.01.2022

# திருகோணமலை பெரியகுளம் பகுதியில் விகாரை அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம்!






திருகோணமலை பெரியகுளம் பகுதியில் விகாரை ஒன்றை அமைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தப் பகுதி மக்களால் நேற்று (வெள்ளிக்கிழமை) ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை பெரியகுளம் பகுதியில் விகாரை ஒன்றை அமைப்பதற்காக அப்பகுதியில் அமைந்துள்ள கடைகளை அகற்றித்தருமாறு உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் பௌத்த துறவி ஒருவரால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதை அடுத்து அந்தப் பகுதிக்கு வருகைதந்திருந்த பொலிஸார் அந்தக் கடைகளை அகற்றுமாறு அறிவுறுத்தியிருந்த நிலையில் ஒன்று திரண்ட அப்பகுதி வாசிகளால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் பொதுமக்களோடு இணைந்து நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோரும் பங்கேற்றனர்.

நாடு இக்கட்டான சூழ்நிலையில் காணப்படும் இந்தக் காலகட்டத்தில் அரசு இவ்வாறான திட்டமிட்ட குடியேற்றங்களை நிறுவுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருவதை அவதானிக்கக்கூடியதாக இருப்பதுடன்.

தமிழ்மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் பரவலான பெரும்பான்மையினக் குடியேற்றங்களைநிறுவுவதற்காக அரசால் முன்னெடுக்கப்படும் இவ்வாறான செயற்பாடுகளைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்ததுடன் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கருத்து தெரிவித்தார்.

# கொக்குவிலில் திருட்டுக் கும்பலை மடக்கிப்பிடித்தனர் பொது மக்கள்!

கொக்குவில் பகுதியில் உள்ள வீடொன்றினுள் புகுந்த திருடர்களின் இருவர் பொதுமக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கொக்குவில் குளப்பிட்டி சந்திக்கு அருகில் உள்ள வீடொன்றினுள் வியாழக்கிழமை இரவு 09.30 மணியளவில் மின்சாரம் தடைப்பட்டிருந்த வேளை மூவர் அடங்கிய திருட்டுக்கும்பல் புகுந்துள்ளது.

அதனை அவதானித்த அயலவர்கள், குறித்த வீட்டை வெளியில் சுற்றி வளைத்து மூன்று திருடர்களையும் , மடக்கி பிடிக்க எத்தனித்த போது , ஒருவர் தப்பியோடிய நிலையில், இருவர் மடக்கி பிடிக்கப்பட்டனர்.

மடக்கி பிடிக்கப்பட்ட இருவரும் சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் இருவரையும் கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.



# வவுனியாவில் பனி மூட்டம் சாரதிகள் அசௌகரியம்

வுனியாவில் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை அதிகளவான பனி மூட்டம் காணப்பட்ட நிலையில் சாரதிகள் வாகனங்களை செலுத்துவதில் பெரும் இடையூறுகளை சந்தித்திருந்தனர்.

வவுனியா நகர்ப்புறம் உட்பட அனைத்து இடங்களிலும் அதிகளவான பனி மூட்டம் காணப்பட்டது.

இதன்காரணமாக பாடசாலை மாணவர்கள், வேலைக்கு செல்வோர், வாகனச்சாரதிகள் எனப்பலரும் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

ஏ9 வீதி உட்பட வவுனியாவில் வீதியால் சென்ற வாகனங்கள் காலை 7.30 மணிவரை ஒளியைப் பாய்ச்சியபடி சென்றதை அவதனிக்கக் கூடியதாக இருந்தது.

அண்மைக்காலமாக மழையுடன் கூடிய காலநிலை வவுனியாவில் காணப்பட்ட போதிலும் தற்போது அதிக பனி மூட்டமாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அமைச்சரவை மாற்றம் தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது! - விமல்



அமைச்சரவை மாற்றம் தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஊடகவியலாளர் - அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் உடனடியாக நீக்கப்படுகிறார்கள் தானே?, எனினும் தாங்கள் இன்னும் இருப்பதாக சிலர் குற்றம் சுமத்துகின்றனரே.

விமல் வீரவன்ஸ - அப்படியானால் அதற்கு நான் எப்படி பதில் சொல்வது. நானும் அதுபற்றிதான் யோசித்துக்கொண்டிருக்கிறேன்.

ஊடகவியலாளர் - நானும் ஏன் இருக்கின்றேன் என்றா?

விமல் வீரவன்ஸ நீங்கள் கேட்ட கேள்வி தொடர்பில் சொன்னேன். -என்றார்.

# அம்பாறை சாகாமம் வம்மியடி காட்டில் புதையல் தோண்டிய நால்வர் கைது!

அம்பாறை திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள சாகாம வம்மியடி காட்டுப்பகுதியில் புதையல் தோண்டலில் ஈடுபட்ட 4 பேரை வியாழக்கிழமை மாலை சாகாம விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை விசேட புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றுக்கு அமைய சம்பவதினமான வியாழன் மாலை குறித்த காட்டுபகுதியை விசேட புலனாய்வு பிரிவினர் விசேட அதிரடிப்படையுடன் இணைந்து முற்றுகையிட்டனர். இதன் போது பெரிய கல்பாறை ஒன்றை கல்லுடைக்கும் கொம்பஸ் இயந்திரம் மூலம் உடைத்து புதையல் தோண்டலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 4 பேரைக் கைது செய்ததுடன் அங்கிருந்து ஜெனரேற்றர் ஒன்றும், கல்லுடைக்கும் கொம்பஸ் இயந்திரம், உட்பட பல உபகரணங்களையும் 3 மோட்டார் சைக்கிள்களையும் மீட்டனர்.

இதில், கைது செய்யப்பட்டவர்கள் அக்கரைப்பற்று, சம்மாந்துறை, மாந்தோட்டம், வட்டினாக்கலை அம்பாறை ஆகிய பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஈஸ்டர் தாக்குதலில் இருந்து என்னை விடுவிக்குக மைத்திரியின் கோரிக்கை நீதிமன்றால் நிராகரிப்பு!



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களால் தனக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் இருந்து தன்னை விடுவிக்குமாறு அவர் நீதிமன்றிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில் அவரது கோரிக்கையை பரிசீலித்த நீதிமன்றம் நேற்று (வெள்ளிக்கிழமை) அதனை நிராகரித்துள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.01.2022இல் வெளியிடப்பெற்றது.

# வடக்கு, கிழக்கு கட்சிகளின் பயணத்துக்கு ஒருபோதும் தடையாக இருக்கமாட்டோம்!



## நமது பயணத்தையும் கைவிடப் போவதில்லை; மனோ, திகா, இராதா நேற்று கூட்டாக அறிவிப்பு

**வடக்கு, கிழக்கு கட்சிகளின் பயணத்துக்கு நாம் ஒருபோதும் தடை யாக இருக்கப்போவதில்லை. அதேவேளை, நமது பயணத்தையும் எந்தச் சந்தர்ப்பத்திலும் கைவிடப்போவதில்லை.**

**- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணி அறிவித்துள்ளது .**

**தமிழ் முற்போக்குக் கூட்டணியில் மனோ கணேசன் எம்.பி. தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி, பழனி திகாம்பரம் எம்.பி. தலைமையிலான தொழிலாளர் தேசிய சங்கம், வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்.பி. தலைமையிலான மலையக மக்கள் முன்னணி ஆகியன அங்கம் வகிக்கின்றன.**

இந்நிலையில் மேற்படி மூன்று கட்சிகளின் தலைவர்களும் இணைந்து நேற்று கூட்டறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர். அந்த அறிக்கையிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

'இந்தியப்பிரதமருக்கு, இலங்கையின் ஒட்டுமொத்த தமிழ் பேசும் கட்சிகளின் விண்ணப்பக் கடிதம்' என்று ஆரம்பிக்கப்பட்ட கூட்டு செயற்பாட்டில், சமீபத்தைய இந்திய வம்சாவளி மலையக தமிழரின் அபிலாஷைகளையும் உள்ளடக்குவதில் சிக்கலை எதிர்கொண்டதாலும், எனவே எமது பங்களிப்பு வடக்கும், கிழக்கு தமிழ்க் கட்சிகளின் சுதந்திரச் செயற்பாட்டுக்குப் பாதகமாக இருப்பதை உணர்ந்ததாலும் இந்தச் செயற்பாட்டுக்கு வெளியில் நின்று அவசியமான ஒத்துழைப்புகளை வழங்குவோம்.

இலங்கையின் ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்கள் என்ற பொதுநோக்கில், இந்தச் செயற்பாட்டை ஆரம்பித்த ஏற்பாட்டாளர்களான செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பி., இணைப்பாளர் சுரேன் குருசுவாமி ஆகியோருக்கு எமது வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றோம்.

அதேவேளை, பொது இணக்கப் பாட்டின் மூலம் பொது ஆவணம் தயாரிக்க முடியாமையைக் கருத்தில்கொண்டு மலையகத் தமிழரின் அபிலாஷைகளை முன்னிறுத்தி பாரதப் பிரதமர், இலங்கை ஜனாதிபதி, தமிழக முதல்வர் உள்ளிட்ட அனைத்து உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் தலைவர்களுக்கும் தனித்தனியாக, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் ஏற்பாட்டில் ஆவணக் கடிதம் எழுதப்படும்.

### முதல் கலந்துரையாடல்

'இலங்கை அரசமைப்பில் ஏற்கனவே உள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்று முழுதாக நடைமுறைப்படுத்தி, அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை உறுதி செய்து, மாகாண சபைத் தேர்தலையும் விரைந்து நடத்த இலங்கை அரசை வலியுறுத்த, இந்தியாவை ஒருமித்து தமிழ் பேசும் மக்களின் கட்சிகள் கோருதல்' என்ற அடிப்படையிலான அழைப்பின் பேரிலேயே ஏற்பாட்டாளர்களால் இந்தக் கூட்டுச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்.), தமிழ்த் தேசியக் கட்சி ஆகிய வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகளுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகிய கட்சிகளும் கடந்த நவம்பர் இரண்டாம் திகதி நடைபெற்ற முதல் கலந்துரையாடலில் கலந்துகொண்டன.

### நோக்கம்

இலங்கை அரசமைப்பில் இடம்பெற்றுள்ள ஒரே அதிகாரப் பரவலாக்கல் சட்டமான 13ஆவது திருத்தம் என்பதை இறுதித் தீர்வாகக் கருதி இந்தப் பேச்சு ஆரம்பிக்கப்படவில்லை. ஆனால், இலங்கை அரசு, இந்தக் குறைந்தபட்ச சட்டத்தைக் கூட முழுமையாக அமுல் செய்யாமல் இழுத்தடிப்பதுடன், இந்தச் சட்டமூலம் மாகாண சபைகளுக்கு வழங்கிய அதிகாரங்களையும்கூட வாபஸ் பெறுகின்றது என்ற உண்மை உலகுக்கு அதிகார பூர்வமாக ஒட்டுமொத்த தமிழ் பேசும் கட்சிகளால் அறிவிக்கப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கமே எமது பொது நோக்காக இருந்தது.

### தமிழரசுக் கட்சி உள்வாங்கல்

இந்தச் செயற்பாட்டில், இலங்கைத் தமிழரசுக் கட்சியும் உள்வாங்கப்பட வேண்டும் என்பதை ஆரம்பம் முதல் வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை நேரடியாக, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் சந்தித்து அழைப்பு விடுத்ததையும், தமிழரசுக் கட்சியைத் தவிர்த்து விட்டு விண்ணப்பக் கடிதத்தில் கையெழுத்திடும் யோசனையை, தமிழ் முற்போக்குக் கூட்டணியாகிய நாம் நிரா கரித்தோம் என்பதையும் ஏற்பாட்டாளர் கள் நன்கறிவார்கள்.

### பொது ஆவணக் கடிதம்

ஆரம்பத்தில், பாரதப் பிரதமருக்கான கடித வரைபு, அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளும், பொது குறைந்தபட்ச நிலைப்பாடுகளைக் கொண்ட விண்ணப்பக் கடிதமாக சுமார் ஒன்றரைப் பக்கத்தில் வடிவமைக்கப்பட்டது. எனினும், தொடர்ச்சியாக நடைபெற்ற கலந்துரையாடல்களின்போது, தமிழ்த் தேசிய அரசியலின் சமகால வரலாறு முழுமையாக அதில் எழுதப்பட்டு, எட்டு பக்கங்களைக் கொண்ட நீண்ட ஆவணக் கடிதவரைபாக மாற்றப்பட்டது. இதன் பின்னுள்ள நியாயப்பாட்டை எம்மால் புரிந்துக் கொள்ள முடிகின்றது.

ஆனால், ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்கள் சார்பான கடிதம் என்பதால், இதே நியாயப்பாட்டின் அடிப்படையில், இந்தக் கடிதத்தில் மலையகத் தமிழ் மக்களின் அபிலாகளும் உள்ளடக்கப்பட வேண்டிய இயல்பான தேவைப்பாடு எழுந்தது. மேலதிகமாக இந்த ஆவணக் கடித வரைவு, இறுதி வடிவம் பெறமுன்னரே ஊடகங்களில் வெளிப்படுத்தப்பட்டு வாதப் பிரதிவாதங்களை தமிழ் பேசும் அரசியல் சமூக பரப்புகளில் ஏற்படுத்தியது.

### பொது ஆவணக் கடிதம் நிராகரிப்பு

இந்நிலையிலேயே, கடந்த வருடத்தின் இறுதி நாளான்று (டிசம்பர் 31ஆம் திகதி), தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் உட்பட கட்சித் தலைவர்கள், பிரதிநிதிகள் கூடி ஆராய்ந்து எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் மறுநாள் இவ்வருடத்தின் முதல் நாள் (ஜனவரி 01), கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் எம்.பியின் கொழும்பு இல்லத்தில் கூடி புதிய கடித வரைபு தயாரிக்கப்பட்டது.

ஆனால், இந்த ஆவணக் கடித வரைவு, உடனடியாகவே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனால் கடும் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டதை நாம் அறிந்தோம்.

### மலையகத் தமிழரின் அபிலாஷைகளை முன்னிறுத்தி ஆவணக்கடிதம்

ஆகவே, பொது ஆவணம் தயாரிக்க முடியாமையைக் கருத்தில்கொண்டு சமீபத்தைய இந்திய வம்சாவளி மலையகத் தமிழரின் அபிலாஷைகளை முன்னிறுத்தி பாரதப் பிரதமர், இலங்கை ஜனாதிபதி, தமிழக முதல்வர் உள்ளிட்ட அனைத்து உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் தலைவர்களுக்கும் ஆவணக் கடிதம் எழுத தமிழ் முற்போக்குக் கூட்டணி முடிவு செய்துள்ளது.

### வடக்கு, கிழக்கு உடன்பிறப்புகளுக்கு எமது ஒத்துழைப்பு தொடரும்

இந்தப் பின்னணிகளிலேயே, தேவையற்ற முரண்பாடுகளைத் தவிர்க் கும் நோக்கில், வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகளின் இந்தச் செயற்பாட்டுக்கு வெளியில் நின்று ஒத்துழைப்புகளை வழங்குவோம் என்ற முடிவை நாம் எடுத்துள்ளோம். வடக்கு, கிழக்கு உடன் பிறப்புகளுக்கு, வரலாறு முழுக்கவும் இதை நாம் செய்துள்ளோம். இனியும் செய்வோம். உரிமைக்குக் குரல் கொடுப்போம்; உறவுக்குக் கை கொடுப்போம் என்ற எமது கொள்கை தொடரும் - என்றுள்ளது.

# மோசமான நிலைமையில் இலங்கை; ஒத்துழைப்பு வழங்க இந்தியா தயார்

## வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவிப்பு

கடினமான சந்தர்ப்பங்களை எதிர்கொள்ளும் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புத்தாண்டை முன்னிட்டு வாழ்த்துத் தெரிவிக்கும் நோக்கில் இலங்கை வெளிவிவகார அமைச்சரான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸைத் தாம் தொலைபேசியில் தொடர்புகொண்டார் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதன்போது இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக தொடர்ச்சியாக தொடர்புகளைப் பேணுவதற்கு இணங்கியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திருகோணமலை எண்ணெய்க் குதங்களை அபிவிருத்திசெய்வதற்காக, இரண்டுநாடுகளுக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையில், இந்திய வெளிவிவகார அமைச்ச ரின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

இந்த ஒப்பந்தம் இருதரப்பு வலுசக்தி பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள கடன் உதவியை நீடிப்பது குறித்து, தொடர்ந்தும் பேச்சுகள் இடம்பெறுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் அண்டை நாடுகளுக்கு முன் னுரிமை என்ற கொள்கையின் கீழ், இலங்கையை முக்கியமான தரப்பாகக் கொண்டு இந்தியா ஒத்துழைப்பு வழங் கும் என்றும் புதுடில்லியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நாட்டின் பொருளாதாரம் அரசால் முற்றாக அழிப்பு

## அநுரகுமார குற்றச்சாட்டு

இலங்கையின் பொருளாதாரம் ராஜபக்ஷ அரசால் முற்றாக அழிக்கப் பட்டுள்ளது எனத் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் நாடாளுமன்ற உறுப் பினர் அநுர குமார திஸாநாயக்க குற்றஞ்சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சீனாவிடம் இருந்து கடன் பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருந்த போது, கொழும்பு துறைமுக நகர் அபிவிருத்தி திட்ட சட்டம் நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்டது.

அதேபோல், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இந்தியாவுக்குச் சென்று கடன் கோரியுள்ள நிலையில், திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் தாரை வார்க்கப்படுகின்றன.

அரசின் உண்மை நிலை தொடர்பான விவரங்களை வெளியிடுவோர் பதவியில் இருந்து நீக்கப்படுகின்றனர்.

இவ்வாறு முறையற்ற நிர்வாகத்தால் நாட்டின் பொருளாதாரம் மேலும் பின்னடைவை எதிர் நோக்கி வருகின்றது - என்றார்.